மூலம் : போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் சுழற்சி மதிப்பீடு 2020 ஆம் ஆண்டுஇ நகர அபிவிருத்தி அதிகாரசபைஇ ஊவா மாகாண காரியாலயம்

3.2.3 நீர் வளங்களின் குறைவு


காலணித்துவ காலப்பகுதியின் போது நகரத்தின் உயர்ந்த மலைகள் பொருளாதார வனவியலுக்காகப்பயன்படுத்தப்பட்டது. 18ம் நூற்றாண்டில் அவுஸ்திரேலியாவுடன்

அக்காலகட்டத்தில் தொடர்புகள் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஸ்ரீலங்கா பூராகவும் யூக்கலிப்ரஸ்(நுரஉயடலிவரள) எனும் பொருளாதார வளவியலை தேயிலை உற்பத்திக்கும்இ விறகு மற்றும் புகையிரதப்பாதைக்கான சிலிப்பர் கட்டைகள் ஆகியவற்றின்இ தேவைக்காக விரிவாக்கினர். 1930 ஆம் ஆண்டளவில் இவ் வளவியலானதுஇ மேட்டுக்காணிப்பகுதிகளில் வனவியல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இத்தோட்டச்செய்கைக்கான பிரதான நோக்கங்கள் யாதெனில்இ இப்பகுதியில் தற்போது உள்ள இலையுதிர் மற்றும் ஊசி இலைகள் உள்ள காடுகளிற்கு பொருளாதாரப்பெறுமதியினை சேர்ப்பதற்கும் மற்றும் தாவர அடர்த்தியினை அதிகரிப்பதும் ஆகும். அதற்கு அப்பால்இ இப்பயிர்கள் காற்றுத்தடைகளாகவும் நாட்டப்பட்டு உள்ளன. ஊவா பிராந்தியத்தில் யூக்கலிப்ரஸ்(நுரஉயடலிவரள) பயிற்செய்கை 1991 ஆம் ஆண்டு வரை வனப்பாதுகாப்பு திணைக்களம் உலக வங்கியின் உதவியுடன் ஆன வன வள அபிவிருத்தி செயற்திட்டம் 1982-87 கால கட்டத்திலும் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன்இ சமூக வன செயற்திட்டம் 1982-89 ஆம் ஆண்டு கால கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

ஆராய்ச்சிக்கு இணங்கஇ இத்தாவரங்கள் அவற்றின் வலுவான ஆவியாதலினாலும் மற்றும் நிலத்தின் உப மேற்பரப்பு அடுக்கினைச்சென்று அடையக்கூடிய ஒரு வேர் கட்டமைப்பினைக்கொண்டிருப்பதனாலும் நிலத்தடி நீர் அடுக்கில் உள்ள நீரினைப்பயன்படுத்துகின்றது. அத்துடன்இ 2019 ஆம் ஆண்டு மற்ரோஸ்(ஆயவவழள)இ ஒலிவேயிரா(முடனைநசைய)இ லுாகாஸ்(டுரஉயள) மற்றும் வென்லாடி(றுநடெயசனை) ஆகியோரினால் பிறேசிலில்(டீசயணடை) வெளியிட்ட ஒரு ஆய்வின்படிஇ யூகலிப்ரஸ்(நுரஉயடலிவரள) எனும் தாவரமானது அதன் மேலதிகமான ஆவியாதலின் தன்மையினால் நில நீரின் விருத்தியினைத்தடுக்கின்றது என அறிவிக்கப்பட்டது. அத்துடன் 1991 ஆம் ஆண்டு இலங்கையில் ரணசிங்க(சுயயெளபொந) மற்றும் ஜயசூரியா(துயலயளரசலைய) ஆகியோரினால் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு அறிக்கைக்கு இணங்கஇ இப்பயிர்கள் மண் வளத்தில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என கண்டறியப்பட்டது.

இப்பகுதியில் அதுவரை காணப்பட்ட நிலக்கீழ் நீர் அடுக்குஇ இப்பொருளாதார வனவியல் தோட்டங்களினால் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக நிலநீர் மட்டத்தில் ஒரு துரித வீழ்ச்சி காணப்பட்டது. அருகாமையில் ஒரு நீர் நிலை இல்லாத காரணத்தினால்இ நகரத்திற்கான போதிய அளவு நீர் விநியோகத்திற்கு நீர் ஆதாரங்கள் காணப்படவில்லை. நில நீரில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவினால் குறைந்தது 32மூ ஆன சமூகம் கிணற்று நீரில் தங்கியுள்ளனர்.

உரு இல 3.3 : உமா ஓயா பல்நோக்கு செயற்திட்ட நிலத்தடி சுரங்கப்பாதைச்சுவடு



மூலம் : உமா ஓயா பல்நோக்கு செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு

இதன் விளைவாக பண்டாரவளை ஊடாக ஒரு வரையறுக்கப்பட்ட அளவு நீர் விநியோகத்தினைக்கொண்டிருந்த உமா ஓயாஇ பல்நோக்கு திட்ட சுரங்கத்தின் நிர்மாணிப்பினால் மேலும் நீர் வளம் குன்றுவதற்காக ஏதுவானதாக இருந்தது. புகுல்பொல நீர்த்தேக்கத்தில் இருந்து அலிகொற்றி அரா நீர்த்தேக்கத்திற்கு நீரைக்கடத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட சுரங்கத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாகஇ அதற்கு மேலான உப மேற்பரப்பு நீர் அடுக்கு மூழ்கியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டதுடன்இ மேலதிகமாக அதிக அளவிலான சொத்துச்சேதமும் அங்கே ஏற்பட்டுள்ளது. இதனால்

கிணற்று நீரில் தங்கியிருந்த பலருக்கு இது நீர் இழப்பினை ஏற்படுத்தியது. நீர் விநியோகத்தின் ஆதாரங்கள் ஆகிய கால்வாய்கள் வறட்சி அடைந்ததன் விளைவாகஇ நீர் விநியோகமும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

ஆகையினால் இது போன்ற அதிக உணர்திறன் கொண்ட பகுதிகளில் அபிவிருத்தி செயற்பாடுகளை ஒரு நிலையான முறையில் மேற்கொள்வதற்கு ஒருங்கிணைந்த ஒரு அபிவிருத்தித்திட்டத்தின் தேவைப்பாடு ஒன்று காணப்படுகின்றது.

3.2.4 திண்மக்கழிவு மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம் ஆகியவற்றில் உள்ள

தளாச்சி(றுநயமநெளள)

நகரத்தின் துரிதமான பொருளாதார அபிவிருத்தியுடன்இ கழிவு நீர் அகற்றுதல் கவனத்திற்கு கொள்ளவேண்டிய ஒன்றாகக்காணப்படுகின்றது. நகரத்தின் எல்லைகள் பெரும்பாலு இரண்டு நீர்நிலைகளினால் வரையறுக்கப்பட்டுள்ளது. நகரத்தின் பல்வேறு இடவிளக்கவியல் இருப்பினும்இ சகல வியாபாரங்கள் மற்றும் சேவைகளும் அதே நீர்நிலைகளில் பங்கினைக்கொண்டுள்ளது. இந்த நீர் ஓட்டமானது நகரத்தின் வெளியே உள்ள நெல்வயல் காணிகளின் ஊடாகச்செல்கின்றது. நகரத்தில் முறையான கழிவு நீர் முகாமைத்துவத்தினது குறைபாட்டின் விளைவாக காணப்படும் இயற்கையான கால்வாய்கள் மற்றும் வடிகால்கள் ஆகியனவற்றினைஇ கழிவுநீர் அகற்றும் வலை அமைப்புகளாகப்பயன்படுத்துவது பொதுவானதாகக்காணப்படுகின்றது. நகரமானது அழகானதாகவும் மற்றும் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் திறன் முழுமையாகக்காணப்பட்ட போதிலும் மழைநீர் வடிகான்கள் ஊடாக வழிந்து ஓடும் நீரானது நகரத்தின் உள்ளே ஒரு கடுமையான துர்நாற்றத்தினை உண்டுபண்ணுவதுடன்இ மழைகாலங்களில் கான்கள் மேலாக நிரம்பி வழிந்தோடும் நீரானது நகரத்தில் ஒரு சுகாதாரம் அற்ற நிலையினை ஏற்படுத்துகின்றது.

நகரத்தில் இருந்து நெல்வயல் காணிகளின் ஊடாக வழிந்து ஓடும் நீரானது வயல்வெளிகளில் பயிரிடப்படும காய்கறிப்பயிர்களின் தரத்திலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

உரு 3.4 : நகர மத்தியில் உள்ள வடிகான்கள்



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2021 ஆம் ஆண்டு

3.3 திட்டமிடும் பகுதியில் காணப்படும் உள்ளாற்றல்கள்(ழேவநவெயைடஎ)

3.3.1 ஸ்ரீலங்காவில் குறிப்பிடத்தக்க சுற்றுலாப்பயணிகளின் இலக்கு

மலை ஏறுதலுக்கு அறிந்த நகரங்களில் பண்டாரவளை தனித்துவம் பெற்றது. பண்டாரவளை மூன்று பிரதான காரணங்களுக்காக பார்வையாளர்களை ஈர்க்கின்றது.

1. களியாட்டம் மற்றும் பொழுதுபோக்கு
2. சுற்றுச்சூழல் ஆய்விற்காக
3. குறிப்பிட்ட விளையாட்டு செயற்பாடுகளுக்காக

காலனித்துவ காலத்தில் இருந்தேஇ பண்டாரவளைப்பகுதியின் விசித்திரமான காலநிலையினை சுற்றுலாப்பயணிகள் விரும்பினர். இக்காலநிலை ஆனதுஇ நாட்டுப்புற சமூகத்திற்கு இணங்க ஆங்கிலேய ஆட்சியாளர்களின் தோலில் ஏற்பட்ட ஒரு விதமான அரிப்பிற்கு சிகிச்சையாக உதவியது. தற்போதும்இ புகழ்பெற்ற பண்டாரவளை விடுதியகம் ஆங்கிலேயர் தமது விடுமுறையினைக்கழிக்கும் இடமாகக்கருதப்படுகின்றது.

ஒரு தனித்துவமான வெப்பநிலையினைக்கொண்டிருக்கும் பண்டாரவளை நகரத்திற்கு வருகை தரும் பல சுற்றுலாப்பயணிகள்இ நடைப்பயிற்சியினை விடவும் அவர்களது தங்கும் இடத்திலேயே தங்கி இருந்து தமது விடுமுறையினைக்கழிப்பதனையே தேர்ந்து எடுப்பது என்பதும் ஒரு தனித்துவமான உண்மை ஆகும். தற்போதெல்லாம் நகரம் பூராகவும் ஆடம்பர குடியிருப்புகள் அமைக்கப்படுவதனையும் மற்றும் விடுமுறையினைக்கழிக்கும் குடும்பங்களின் மத்தியில் அதற்கான உயர்ந்த தேவைப்பாடு காணப்படுகின்றது என்பதனையும்இ சுற்றுலா வணிகத்துடன் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டபோது உறுதி செய்யப்பட்டது. அதிக அளவிலான மக்கள் பண்டாரவளையினை ஒரு நிரந்தர வதிவிடமாக அல்லாது ஒரு விடுமுறைக்கான இலக்கு ஆக தேர்ந்து எடுத்துள்ளனர்.

உரு 3.5 : பண்டாரவளையினைச்சுற்றிய சுற்றுலாப்பயணிகளின் கவர்ச்சிகள்






மேலே குறிப்பிடப்பட்டுள்ளதுடன்இ நகரத்தின் உள்ளேயும் அதனைச்சுற்றியும்இ மரக்கறி மற்றும் மலர்களின் பயிர்ச்செய்கையும் தனித்துவமான காலநிலையின் விளைவாக அதிகம் பிரசித்தி பெற்றுள்ளது. சுற்றுலாத்தொழிலின் அபிவிருத்தியானதுஇ இப்படிப்பட்ட மலர்களின் பயிர்ச்செய்கை செயற்பாடுகளுக்கும் மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை செயற்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளது.

ஸ்ரீலங்காவின் சுற்றுலாப்பயணிகளின் பாதை பண்டாரவளையின் ஊடாக செல்வதனால்இ நகரத்திற்கு நேரடியாக வருகை தராத சுற்றுலாப்பயணிகளும்இ ஒரு குறுகிய நேரத்திற்கு தரித்து நிற்பதற்கு வருகை தருகின்றனர். அதன் மூலமாக நகரத்தின் எல்லா இடங்களிலும் பரவிக்காணப்படும் வர்த்தக செயற்பாடுகளிலும் மேம்பாட்டினைக்காணமுடிகின்றது. நகரத்தின் மையப்பகுதியில் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்காக எதுவுமே காணப்படாத போதிலும்இ பசுமையான மலைகள் ஓரமாக நீடித்துள்ள இயற்கையான காட்சி மற்றும் பாதைகளும் இக்கவர்ச்சிக்கு பங்களித்துள்ளது. அத்துடன் ஹப்புத்தளை எல்ல(நுடடய) பொறலந்த(டீழசயடயனெய) போன்ற பகுதிகளுக்கு வருகை தரும் பெரும் அளவிலான மக்கள்இ பண்டாரவளையினை தங்களது மூலோபாய தங்கும் இடமாக தேர்ந்து எடுக்கின்றனர்.

3.3.2 பிராந்தியத்தின் பிரதான வர்த்தக நகரமாக பண்டாரவளை காணப்படுகிறது

நேரியல் நகர்ப்புற வடிவம் கொண்டுள்ள பண்டாரவளைஇ பெரும்பாலும் பதுளை- கொழும்பு யு16 பாதை வழியாக வளர்ச்சி கண்டுள்ளது. ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பிரதான நகரமாக பதுளை காணப்பட்ட போதிலும்இ பண்டாரவளையானது அதன் மூலோபாய அமைவிடத்தின் விளைவினால் பல வர்த்தக மற்றும் நிதி செயற்பாடுகளை ஈர்த்துள்ளது.

மொத்த வியாபாரச்சந்தைஇ விவசாய உற்பத்திகளின் வர்த்தகத்தில் ஒரு தனித்துவமான இடத்தினை பிடித்துக்கொண்டுள்ளது. தினமும் 100 முதல் 125 மெ.தொ(ஆவு) இடைப்பட்ட பயிர்ச்செய்கை உற்பத்திகளை மொத்த வியாபாரச்சந்தை விற்பனைக்காக கொழும்புஇ மாத்தறைஇ காலி மற்றும் களுத்துறை போன்ற நகரங்களுக்கு அனுப்பிவைக்கின்றது. தனியார் மொத்த வியாபாரிகள் மற்றும் கார்கில்ஸ்(ஊயசபடைடள) மொத்த வியாபார நுகர்வோர் சேவைகள் ஆகியனவும் மெ.தொ 60 மற்றும் 6 மெ.தொன் ஆகிய வர்த்தகத்தினை முறையே கையாளுகின்றன. இதனால்இ பண்டாரவளை அதன் மூலோபாய அமைவிடம் மற்றும் நகரத்தினைச்சுற்றி உள்ள விவசாய காணிகளின் இருப்பிடத்தினால் மொத்த வியாபாரத்திற்கு தனித்துவம் பெற்றுள்ளது.

பண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தை ஸ்ரீலங்காவில் ஒரு பொருளாதார மையமாகக்கருதப்படாவிட்டாலும்இ அது பெருமளவு எண்ணிக்கையிலான வர்த்தகர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரை ஈர்க்கின்றது. மாத்தறைஇ காலிஇ அம்பாறைஇ கொழும்புஇ இரத்தினபுரி மற்றும் பிற நகரங்களிலும் இருந்து வர்த்தகர்கள் பிராந்திய உள்ள அற்றம்பிற்றியாஇ வெல்லவாயாஇ பொறலந்தஇ வெலிமடைஇ எல்ல(நுடடய) மற்றும் நவெலகம போன்ற விவசாயப்பகுதிகளில் இருந்து காய்கறி தொகையினை பெற்றுக்கொள்வதற்காக வருகை தருகின்றனர். இப்பகுதியின் காலநிலையின் குணாம்சங்களின் விளைவாகஇ வளமாக வளர்ந்த காய்கறி பயிர்களுக்காக வெளிப்பிராந்தியங்களில் இருந்து வருகை தரும் வர்த்தகர்கள் இடமிருந்து உறுதியான ஒரு தேவைப்பாடு காணப்படுகின்றது. கப்பிற்றிப்பொல(முயிநவணிழடய)

பொருளாதார மையத்தை சுற்றியுள்ள வசதிகளுடன்இ மொத்த விற்பனைச்சந்தை வளாகத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள பல வர்த்தகர்கள் அவர்களின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் காய்கறி பயிர்கள் காணப்படுவதனாலும் மற்றும் சுலபமான அணுகுமுறையினைக்கொண்டிருப்பதனாலும்இ தமது வணிக செயற்பாடுகளை

பண்டாரவளையினைச்சுற்றி நடாத்துகின்றனர். அதற்கு இணங்க பண்டாரவளை காய்கறிகள் எனும் பெயரும் வர்த்தகர்கள் மத்தியில் பிரசித்தி பெற்றுள்ளது. விவசாய சேவைகளுக்கு மேலதிகமாகஇ விவசாய உற்பத்தி பொருட்களின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் விவசாய உரம் மற்றும் இரசாயனப்பொருட்களின் விற்பனைக்கான வர்த்தக ஸ்தாபனங்களும் காணப்படுகின்றன. விவசாய சேவைகளின் விரிவாக்கத்தின் விளைவாகஇ பல விவசாயிகள் தமது பயிர்களின் வியாபாரத்தினை பண்டாரவளையினைச்சுற்றி நடாத்துவதுடன்இ மேலும் அவர்களுக்கு தேவைப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களை வாங்குவதற்கு பண்டாரவளை நகரத்தினைத்தேர்ந்து எடுத்துள்ளனர். வெலிமடை மட்டுமே பிராந்தியத்தில் விவசாய பொருட்களின் வர்த்தக வசதிகளுடனான மற்றய ஒரே ஒரு நகரமாகும். ஆனால்இ பல விவசாயிகள் சுலபமான அணுகுமுறையின் விளைவாக பண்டாரவளையினை நாடுகின்றனர்.

மேலும் நகரத்தின் குடியிருப்பாளர்களிடம் இருந்து சுத்தமானதும் மற்றும் புதியதுமான காய்கறிகளுக்கு நகரத்தின் உள்ளேயும் அதனைச்சுற்றியும் உயர்ந்த தேவைப்பாடு காணப்படுகின்றது. மேலும் நகரத்திற்கு பயணிக்கும் சனத்தொகையும்இ ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தை நடைபெறும் போது பண்டாரவளை மரக்கறிகளை வாங்குவதற்கு ஆர்வம் கொண்டு உள்ளனர் என்பது தெளிவாகின்றது. இதனால் விவசாய ரீதியிலான சேவைகள் மற்றும் விவசாயஉற்பத்திகள் ஆகியவற்றிற்கான தற்போதைய நிலைமையானது நகரத்திற்கு வலு ஊட்டியும் உள்ளது.

உரு 3.6 : பண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தை 2020 ஆம் ஆண்டு




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2020 ஆம் ஆண்டு

இதற்கு அப்பால்இ மலர்வளர்ப்பும் நகரத்தின் ஒரு தனித்துவமான விவசாய உற்பத்தியாக இவ்வர்த்தகத்தை கருத்தில் கொள்ள முடியும். இவ் வர்த்தகம் ஆனது நகரத்தில் அமைந்துள்ள தனியார் வர்த்தகர்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. மலர்களை வளர்க்கும் விவசாயிகள்இ அவர்களது விவசாயத்தினை நகரத்திலும் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் மேற்கொள்கின்றனர்.

விவசாய ரீதியிலான சேவைகளுடன் தொடர்புபட்ட வர்த்தக வசதிகள் மாநகர சபைக்கு அதி உயர்ந்த வருமானத்தினை ஈட்டிக்கொடுக்கின்றது. இந்த இரு பிரதான விவசாய உற்பத்திகளும் மற்றும் காணப்படுகின்ற நிதி சம்பந்தமான வசதிகளும் திருப்திகரமான மட்டத்தில் காணப்படுகின்றது. ஆகையினால்இ பிராந்தியத்தில் உள்ள விவசாயிகள் உற்பத்தி செயல்முறைக்குத்தேவையான பூச்சிகொல்லிகள் மற்றும் உரம் ஆகியவற்றினை பெறுவதற்கு பண்டாரவளை நகரத்தினைத்தேர்ந்து எடுத்துள்ளனர்.

மேலும்இ சுற்றுலாத்துறையின் விருத்தியுடன் நகரத்தினைச்சூழ்ந்து வசித்துவரும் குடியிருப்பாளர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கு புடவை கலந்த வர்த்தக செயற்பாடுகள் மற்றும் விடுதியகங்கள் ஆகியன நகரத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

விளக்கப்படம் இல 3.2 : வர்த்தக செயற்பாடுகளின் வகைப்பாடு



මූලම : வளங்களின் விபரக்குறிப்பு பண்டாரவளை பிரதேச செயலகம் 2020 ஆம் ஆண்டு

மேலும் இப்பிராந்தியத்தில் உள்ள மற்றய நகரங்களை விட பண்டாரவளையில் மாத்திரம் பெயர்பெற்ற புடவை வாங்கும் ஸ்தாபனங்கள் அமைந்துள்ளமையினால்இ அது நகரத்திற்கு மக்களைக்கவர்ந்துகொள்ளக்கூடிய தன்மையினை அதிகரித்துக்கொள்ள வழிவகுத்துள்ளது. இச்சேவைகளுக்கு நிதி வசதிகளைப்பெற்றுக்கொள்வதற்காக எல்லா நிறுவனங்களின் கிளைகளும் பண்டாரவளை நகரத்தின் உள்ளே ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் நகரமானது ஒரு செயற்திறன் கொண்டுள்ள நகரமாவதற்கு(ளுஅயசவ ஊவைல) பல்வகைப்பட்ட வணிக ஆற்றல் கொண்ட ஒரு இடமாக அடையாளங்காண முடிகின்றது.

வணிக ரீதியில் நகரம் அபிவிருத்தி அடையும் போதுஇ நகரத்தின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அதிக அளவிலான மக்கள் பண்டாரவளையினை தமது வதிவிடமாகத்தெரிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். அதற்கு இணங்க பிராந்தியத்தில் உள்ள மற்றய பகுதிகளுடன் ஒப்பிடும் போது பண்டாரவளையில் ஒரு உயர்ந்த காணிப்பெறுமதிகாணப்படுகின்றது.

3.3.3 பிராந்தியத்தின் பிரதான கல்வி மையம்

பண்டாரவளைப்பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற பாடசாலைகள்இ பிராந்தியத்தில் உள்ள மற்றய பாடசாலைகளை விடவும் உயர்ந்த பெறுபேறுகளைப்பதிவு செய்துள்ளமையானது இதற்கு வழி வகுத்துள்ளது. விசேடமாக பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம்இ தர்மபால நவோதய வித்தியாலயம் மற்றும் அர்ச்..தொமஸ் தனியார் பாடசாலை ஆகியன முதல் இடம் பெற்றுள்ளன.

பண்டாரவளைப்பகுதி அதன் வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்தே கல்விசார் சேவைகளுக்கு புகழ்பெற்றுக்காணப்பட்டது. உலக யுத்த காலத்தின் போது கொழும்பில் இருந்த பல பாடசாலைகள் பாதுகாப்பு கருதி பண்டாரவளைப்பகுதிக்கு இடம்மாற்றப்பட்டன.

புகழ் பெற்ற பாடசாலைகள் காணப்படுவதன் விளைவாகஇ தனியார் வகுப்புகளுக்கு ஒரு உயர்ந்த தேவைப்பாடு காணப்பட்டது. பிரபல தனியார் பயிற்றுனர்கள் மூலோபாய ரீதியாக பண்டாரவளையில் அமைவிடங்கொண்டுள்ளமையினால் வெல்லவாயாஇ மொனராகலைஇ பதுளை முதலிய தூர இடங்களில் இருந்து வருகை தரும் மாணவர்களுக்கு தினமும் வகுப்புகள் நடாத்தப்படுவதனை காணமுடிகின்றது.

நகர எல்லைகளுக்கு உள்ளே ஏறக்குறைய 25இ000 மாணவர்கள் கல்வி கற்கின்றதுடன் மேலும் 10இ000 பிள்ளைகள் தனியார் வகுப்புகளுக்கு வருகை தருகின்றனர். அத்துடன் பண்டாரவளை வலைய காரியாலயத்தின் தரவுகளுக்கு இணங்கஇ நகர எல்லைகளுக்குள் வசிக்கும் 30மூ ஆன பிள்ளைகள் அங்கே தங்கி இருந்து கல்வியினைப்பெற்றுக்கொள்வது என்பதுஇ கல்விசார் சேவைகளுக்கு பண்டாரவளைப்பகுதி உயர்ந்த ஏற்புடமையினைக்கொண்டுள்ளது என்பதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

உரு 3.7 : பண்டாரவளை நகரத்தில் தனியார் வகுப்புகள் 2020 ஆம் ஆண்டு



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2020 ஆம் ஆண்டு

ஸ்ரீலங்கா சுற்றுலா மற்றும் விடுதிமுகாமைத்துவ கூட்டுத்தாபனம்இ பண்டாரவளை தேசிய கல்லூரிஇ சேவைக்கால கல்வி பயிற்சி நிறுவனம்இ தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுத்தாபனம்இ தேசிய திறந்த பல்கலைக்கழகம்இ தொழில் நுட்பக்கல்லூரி முதலியன நகர எல்லைகளிற்கு உள்ளே அமைந்துள்ளன.

அதேபோல் பல கல்விசார் மற்றும் வர்த்தக சேவைகள் ஒரு போதிய அளவிலான மட்டத்தில் நகரம் பூராகவும் அமைந்துள்ளது. அதன் விளைவாக பெரும் எண்ணிக்கையிலான தனி நபர்கள் குடியிருப்பாளர்களாகவும் மற்றும் நாளாந்த பயணிகளாகவும்இ நகரத்தினை நோக்கி பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதற்காக பண்டாரவளைக்கு இடம்பெயர்ந்துள்ளனர். ஆரம்ப ஆய்விற்கு இணங்க இவர்கள் பலாங்கொடைஇ வெல்லவாயாஇ மொனறாகலைஇ பிபில(டீடிடைய)இ மஹியாங்கனை மற்றம் நுவர எலியா ஆகிய இடங்களில் இருந்து வந்தவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

பாகம்

4

அத்தியாயம் 4

அபிவிருத்தி திட்டமிடல் கட்டமைப்பு

4.1 தொலை நோக்கு

"மலைத்தொடரில் மலர்ந்த விடுமுறை நகரம"

4.2 தொலை நோக்கு அறிக்கை

பண்டாரவளை நகரமானது அதன் தனித்துவமான காலநிலையின் காரணமாக பசுமையான மலைகளுக்கு மத்தியில் ஒரு தங்கும் விடுதியாக அறியப்படுகின்றது. தொலைவில் காணப்படும் பசுமையான மலைகளின் காட்சியானது சுற்றுலாப்பயணிகளைக்கவரும் தன்மையினை இரட்டிப்பாக்குகின்றது. அடர்த்தியான காடுகள் நிறைந்துஇ மெதுவாக மறைந்துபோகும் மலைத்தொடர்களுக்கு ஓர் பாதுகாப்புத்திட்டத்தில் கவனம் செலுத்துவதன் மூலமாகஇ மலைகளின் மத்தியில் ஒரு உயரிய சிறப்புக்கொண்ட சுற்றுலா நகரத்தினை உருவாக்குவதே இலக்காகும். நகரத்தில் சுற்றுலாப்பயணிகள் தங்கி இருக்கும் காலநேரத்தினை அதிகரிப்பதற்கும்இ மலர்கள் நிறைந்த "ஒரு ரோஜா"('ய சுழளந') நகரத்தினை உருவாக்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படியாகஇ இப்பகுதியின் தனித்துவமான காலநிலையினை உணர்ந்து கொள்வதற்காகஇ வருகை தரும் சுற்றுலா பயணிகளும் மற்றும் நகரத்தினைச்சுற்றி சுற்றுலா கவர்ச்சி கொண்டுள்ள இடங்களுக்குச்செல்லும் சுற்றுப்பயணிகளும் பண்டாரவளையினை ஒரு மூலோபாய தங்கும் இடமாக தேர்ந்தெடுப்பர்.

4.3 இலக்குகள்

1. மலைநாட்டில் "மகிழ்ச்சியான இலக்காக" பண்டாரவளையினை அமைத்தல்.

2. பண்டாரவளையினை நகர பாவனையாளர்களுக்கு ஒரு "செழிப்பான நகர மையம்" ஆக உருவாக்குதல்.

3. பண்டாரவளையினை பிராந்தியத்தின் "துடிப்பானதும் நிலையானதுமான பொருளாதார மையம்" ஆக உருவாக்குதல்.

4.4 நோக்கங்கள்

1. பண்டாரவளையினை மலைநாட்டில் ஒரு மகிழ்ச்சி வழங்கும் நகரமாக உருவாக்குதல்.

- 2033 ஆம் ஆண்டில் எல்ல(நடடய) - நுவரேலியா சுற்றுலாப்பாதையில் இருந்து 50மூமான சுற்றுலாப்பயணிகளைக்கவர்வதற்கும்இ மேலும் சுற்றுலாப்பயணிகள் ஒன்று கூடும் இடங்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் நகர மத்தியின் அழகினை மேம்படுத்தலும்.

- 2033 ஆம் ஆண்டில் வெலிமடைஇ பதுளை மற்றும் டியத்தலாவை பிரதான வீதியின் ஓரமான பழமை வாய்ந்த கட்டிடக்கலை மற்றும் நிலத்தோற்றமிடல் ஆகியவற்றினை மீட்டு எடுத்தல்

- டியத்தலாவை பகுதியை நோக்கி 2033 ஆம் ஆண்டு அளவில்இ இயற்கை அழகு கொண்டுள்ள காட்சிகளை பாதுகாப்பதற்குஇ சரிவான பகுதிகளில் அபிவிருத்தியினை வழிநடத்துதல்.

2. பண்டாரவளையினை குடியிருப்பாளர்களுக்கும் மற்றும் நகர பாவனையாளர்களுக்கும்

செழிவான நகர மத்தியாக உருவாக்குதல்.

2033 ஆம் ஆண்டு அளவில் மேம்படுத்தப்பட்ட வீதி வலையமைப்பின் வாயிலாகஇ

கஹரெவெல மற்றும் பின்டுனுவேலா ஆகியனவை இணைக்கப்பட்ட உப வர்த்தக தொகுதிகளாக உருவாக்குதல்.

30 ஏக்கர் விவசாயக்காணிகளை உள்நாட்டு காடுகளாக 2033 ஆம் ஆண்டளவில் மாற்றி அமைப்பதன் மூலமாகஇ பண்டாரவளையின் பசுமை மற்றும் நீல நிறமான சுற்றாடலைப்பாதுகாத்தல்.

எல்ல(நடடய) நுவரேலியா சுற்றுலாப்பயணிகளின் பாதையில் பண்டாரவளையினை ஒரு சேவை வழங்கும் நகரமாக 2033 ஆம் ஆண்டளவில் மேம்படுத்துதல்.

3. பண்டாரவளையினைஇ பிராந்தியத்தின் ஒரு ‘‘துடிப்பானதும் ஸ்தீரமானதுமான

பொருளாதார மத்தியாக’’ உருவாக்குதல்.

2033 ஆம் ஆண்டு அளவில் வெலிமடைஇ டியத்தலாவை மற்றும் பதுளை ஆகிய இடங்களை நோக்கி மூன்று பொருளாதார வழிகளாக மேம்படுத்துதல்.

- பண்டாரவளையின் விவசாய உற்பத்தி சேவைகளை செயலளவில் உண்மை என எடுத்துக்கொள்ளத்தக்க தளமாக 2033 ஆம் ஆண்டளவில் மேம்படுத்துதல்.

- 2033 ஆம் ஆண்டளவில் சுற்றுலாப்பயணிகள் தங்கி நிற்கும் இரவு சேவைகளை நீடிப்பதன் வாயிலாகஇ 50மூ அளவில் சுற்றுலாப்பயணிகளின் வருவாயினை உயர்த்துதல்.

- பண்டாரவளையின் கல்வி சேவைகள் முனையாக பின்டுனுவேவாவினை 2033 ஆம் ஆண்டளவில் மேம்படுத்துதல்.

பாகம்
5

அத்தியாயம் 05

விரிவான வ.த.ச.அ(ளுறுழுவு) பகுப்பாய்வு

5.1 மலைநாட்டில் பண்டாரவளையினை ஒரு "மகிழ்ச்சியான இலக்காக" அமைத்தல்

ை. ஒரு பிரபலமான சுற்றுலாப்பயணிகளின் இலக்கு

- காலனித்துவ காலத்தில் இருந்து பண்டாரவளையானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு ஒரு புகழ்பெற்ற இடமாகத்திகழ்கின்றது.

மிதமான காலநிலை இப்பகுதியிலும் நகரத்தினைச்சுற்றியும் காணப்படுவதனாலும் எல்ல(நடடய)இ ஹப்புத்தளைஇ பொரலந்தஇ பதுளை போன்ற கவர்ச்சியான இடங்கள் காணப்படுவதனாலும் மற்றும் இப்படியான சகல இடங்களையும் சென்று அடைவதற்கான மூலோபாய இடமாக பண்டாரவளை காணப்படுவதனால்இ பல சுற்றுலாப்பயணிகள் அதனை தங்களது தங்கும் இடமாக தேர்ந்து எடுத்துள்ளனர்.

மற்றய பகுதிகளுடன் ஒப்பிடும்போதுஇ பண்டாரவளையினை புகையிரத மற்றும் வீதி வழியான இரு வகையான போக்குவரத்தினாலும் அணுகக்கூடியதாக இருப்பதனால்இ பண்டாரவளை பிரபல்யமான இடமாக இருப்பதற்கும் இது ஒரு காரணமாக விளங்குகின்றது.

ளை. சுற்றுலாப்பயணிகளின் விடுதிகள் மற்றும் உணவகங்கள் காணப்படுதல்

- மாநகர சபையின் உள்ளே 2020 ஆம் ஆண்டில் மட்டும் 69 சுற்றுலாப்பயணிகளின் விடுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ஒரு தனித்துவமான நிலைமையினைக்கொண்டுள்ள ஆடம்பர விடுதிகள் மற்றும் ஒறியன்ற்(ழுசநைவெ) விடுதிஇ பண்டாரவளை விடுதி முதலியவற்றினை விரிவாக்கம் செய்வதற்கான ஒரு உயர்ந்த தேவைப்பாடு காணப்படுகின்றது.

ளைை. சுற்றுலாத்துறையில் கல்வியை வழங்கக்கூடிய நிறுவனங்களை ஸ்தாபித்தல்

- சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவம் ஆகியவற்றில் அறிவினை வழங்கக்கூடிய ஸ்ரீலங்கா சுற்றுலா விடுதி முகாமைத்துவ நிறுவனத்தின் ஒரு கிளையினை அமைத்தல்.
- 1999 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் மேலும் அது சமையல்தொழில் விடுதிவேற்பாளர் பயிற்சிஇ உணவக சேவைகள் முகாமைத்துவம்இ விடுதி வீட்டுப்பராமரிப்பு முதலியனவற்றினை கற்றுக்கொள்வதற்கான வகுப்புகளையும் நடாத்தின.
- இந்த நிறுவனம்இ 3-4 மாத காலப்பகுதிகொண்ட குறுகிய கால வகுப்புகள் மூலமாகஇ சுற்றுலாத்துறை பற்றிய அறிவுகொண்டுள்ள ஏறக்குறைய 1000 மாணவர்களை இப்பகுதிக்குக்கொடுத்துள்ளது.

பலவீனம்(றுநயமநெளள)

1. உயர்ந்த அபிவிருத்தி அழுத்தத்தின் விளைவாக ஏற்படும் எதிர்மறை விளைவுகள்

- ஒரு சுற்றுலா மையம் பிராந்தியத்தில் ஒரு பிரதான வர்த்தக நகரம் மற்றும் பிராந்தியத்தில் பிரதான கல்விச்சேவைகளை வழங்கும் ஒரு நகரம் ஆக இருப்பதன் காரணமாகஇ பண்டாரவளை குடியிருப்பு ஒரு உயர்ந்த சனத்தொகை ஈர்ப்பினைக்கொண்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் பண்டாரவளையின் சனத்தொகை வளர்ச்சி 1.24மூ ஆகும்.

- மலைச்சரிவுகளின் வழியாக வதிவிட பாவனைக்கான அதிகரித்த தேவைப்பாடுஇ திட்டமிடப்படாத சிறு துண்டுகளான நில உபபிரிவுகள் மற்றும் இப்பகுதியின் பொதுவான மலைக்காட்சிகளை தடை செய்யும் நிர்மாணிப்புகள் ஆகியனஇ இவற்றில் பிரதானமானவை ஆகும்.

(னை) நகர மத்தியில் போக்குவரத்து நெரிசல்

- ஒரு நேரியல் நகர்ப்புற அமைப்பினைக்கொண்டுள்ளதும்இ பண்டாரவளைப்பகுதியில் உள்ளதுமான நான்கு வீதிகளும்இ இட விளக்கவியலின் விளைவாகஇ செங்குத்துச்சரிவுகள் வழியாகக்காணப்படுகின்றது.

- நகரத்தில் அண்ணளவாக 530 வழமையான வாகனதத்தரிப்பு இடங்கள் காணப்படுவதுடன் அதில் 320 ஆம் வீதியில் காணப்படுகின்றது.

- தனியான வாகனத்தரிப்பு இடங்களாக 210 இடங்கள் மட்டுமே காணப்படுகிறது.

- இதன் விளைவாக நகரத்தின் உள்ளே சுற்றுலாப்பயணிகளின் சமூகம் தரித்து நிற்கக்கூடிய இயலுமை ஓரளவு வரையறுக்கப்படுகின்றது.

னை. பொதுவான திறந்த பகுதிகளின் பற்றாக்குறை

- தற்போது காணப்படும் திறந்த வெளிகளான சிறார்களின் பூந்தோட்டம்இ மஹானாகரா சபை அரங்கம்(ஆயாயயெபயசய ளுயடிாய ளுவயனரைஅ)இ வட கபிலவெல அரங்கம்(ழேசவா ஊயடிடையறநடய ளுவயனரைஅ) போன்ற திறந்த வெளிகள் வரையறுக்கப்பட்ட அணுகுறையினைக்கொண்டுள்ளன.

- மொத்த காணிப்பயன்பாட்டு முறையில் 3.1 ஹெக் மட்டும்இ அதாவது மொத்த காணிப்பகுதியில் 0.1மூ அளவில் இப்பாவனைக்கு உரித்தாக உள்ளது.

- தரமான அளவிற்கு இணங்கஇ திட்டமிடல் பகுதியின் உள்ளே திறந்த வெளிகளுக்காக 31 ஹெக்ராயர் ஒதுக்கப்படுதல் வேண்டும்.

ளை. காலணித்துவ காலத்தில் இருந்த கட்டிடக்கலை அம்சங்கள் மறைந்து போதல்

- பண்டாரவளையானது காலனித்துவ காலப்பகுதியில் தோன்றிய ஒரு நகரமாகும்.

- தேயிலை எடுத்துச்செல்லப்படுவதற்காக அமைக்கப்பட்ட புகையிரத நிலையம் மற்றும் வீதி வலை அமைப்புஇ ஆகியவற்றுடன் கூடிய சாதகமான காலநிலையின் விளைவாக ஆங்கிலேய ஆட்சியாளர்களினால் ஓய்வு எடுப்பதற்கும்இ பொழுது போக்குவதற்குமாக பயன்படுத்தப்பட்டதும்இ உல்லாசத்திற்காக போகும் ஒரு இடமாகவும் விளங்கியது.

- உயர்ந்த நகரமயமாக்கலுடன் இன்று நகரத்தில் ஒரு வர்த்தக நகர வடிவம் தோன்றுவதுடன்இ மேலும் ஒரு சில சிறிய கட்டிடங்களும் ஒரு சாதாரண மற்றய

எல்லா கட்டிடங்களும்இ ஒரு சாதாரண நகரத்தின் குணாம்சங்களை வெளிப்படுத்துகின்றன.

எ. திரவக்கழிவு முகாமைத்துவத்தில் தற்போது உள்ள பலவீனங்கள்

- பண்டாரவளை நகரத்தில் திரவக்கழிவு முகாமைத்துவதற்திற்கான ஒரு முறையான அமைப்பு காணப்படவில்லை.

- தற்போது நகரின் மழை நீர் வடிகான் திரவக்கழிவினை அகற்றுவதற்கும் ஒரு வழியாக பயன்படுத்தப்படுவதனால் இந்த நிலைமை நகரம் முழுவதிலும் ஒரு கடும் துர்நாற்றம் வீசும் நிலையினை ஏற்படுத்தியுள்ளது.
- கணிப்பீடுகளுக்கு இணங்கஇ தற்போது உள்ள சனத்தொகை தொடர்பாக நாளாந்தம் 5130 கன மீற்றர் அளவிலான திரவக்கழிவு அகற்றப்படுவதுடன்இ மேலும் 2030 ஆம் ஆண்டு அளவில் 5892 கன மீற்றர் அளவிற்கு உயர்வு ஏற்படும்.

எை. சந்தர்ப்பங்கள்(ழிழசவரவைநைள)

ை. பண்டாரவளையானது சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் பல இடங்களின் மத்தியில் அமைந்துள்ளது.

தனித்துவமான அம்சங்கள் கொண்டுள்ள பல சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கக்கூடிய ஒரு மூலோபாய சுற்றுலா இலக்கு ஆகும்.

வெவ்வேறு காலநிலை மற்றும் சுற்றாடல் ரீதியிலான நிலைமைகளைக்கொண்டுள்ள ஹப்புத்தளைஇ பதுளைஇ வெல்லவாயாஇ வெலிமடைஇ நுவரேலியாஇ டியத்தலாவ போன்ற இடங்களை ஒரு வரையறுக்கப்பட்ட கால நேரத்தில் அடையமுடிகின்றது.

எனை. அச்சுறுத்தல்கள்(வுாசநயவள)

ை. 2019 ஆம் ஆண்டு முதல் கோவிட்-19 தொற்று நோயினால் ஏற்பட்ட தற்போதைய நிலைமை

- மத்திய வங்கியின் 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கைக்கு இணங்கஇ சுற்றுலாத்துறையானது ஸ்ரீலங்காவின் தேசிய உற்பத்தியின் 12.5மூ இனைப்பிரதி பலித்தது.

- ஆனால்இ 2019 ஆம் ஆண்டு முதல் கோவிட்-19 தொற்று நிலைமையினால் அமுலாக்கப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடுகளின் விளைவாகஇ உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகையானதுது மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது.

- உயர்வான அறையின் கட்டணங்கள் கொண்ட விடுதிகள் அவர்களது கட்டணங்களை குறைக்க வேண்டி இருந்ததுடன்இ மேலும் சுற்றுலாத்துறையில் இருந்த பல நபர்கள் தமது தொழில்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

5.1.2 குடியிருப்பாளர்களுக்கும் மற்றும் நகரப்பாவனையாளர்களுக்கும் பண்டாரவளையினை ''செழிப்பான நகர மத்தி'' ஆக உருவாக்குதல்.

வலிமை

ை. நன்கு இணைக்கப்பட்ட வீதி வலை அமைப்பானது நுவரேலியாவிற்குச்செல்லும் டீ43 வீதி மற்றும் பூனாகலைக்கு(ழழயெபயடய) செல்லும் டீ42 வீதி ஆகியனவற்றுடன்இ நேர் வடிவில் ஒழுங்கு செய்யப்பட்ட நகர அமைப்பினை காட்டும் கொழும்பு -பதுளை யு16 பிரதான வீதி நன்கு இணைக்கப்பட்டுள்ளது.

- வீதி வலை அமைப்பின் இணைப்புப்பகுப்பு ஆய்விற்கு இணங்கஇ பண்டாரவளை நகரத்தின் உள்ளே ஒரு உயர்ந்த இணைப்புகளின் மதிப்பீட்டினையும் அடையாளங்காண முடிகின்றது. (படவரைவு இல 5.1)

ளை. பல்வகைப்பட்ட வர்த்தக வசதிகள் காணப்படுதல்.

புடவைஇ விவசாய சேவைகள்இ நிதி சேவைகள் போன்ற பல்வகைப்பட்ட வர்த்தக வசதிகள் கொண்டுள்ள அமைவிடம்.

ளைை. ஒரு பெருமளவு எண்ணிக்கையிலான நன்கு அறியப்பட்ட பாடசாலைகள் மற்றும் கல்விசார் நிறுவனங்கள்.

- கல்வி சார்ந்த சேவைகள் தொடர்பான தரவுகளின் பகுப்பாய்விற்கு இணங்கஇ ஏறக்குறைய 25இ000 மாணவர்கள் நகரத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர்

- வெளிப்புற பட்டப்படிப்புகள் மற்றும் பாடசாலை கல்வி போன்ற நிபுணத்துவ படிப்புகள் காணப்படுகின்றன

- தரவுகளின் பகுப்பாய்வானதுஇ பாடசாலை செல்லும் 30மூ ஆன மாணவர்கள் தற்காலிகமான இடங்களில் தங்கி இருந்து கல்வி கற்கின்றனர் என்பதனை உறுதி செய்கின்றது.

ளை. விவசாயம் தொடர்பான உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளை அணுகுதல்

- பண்டாரவளையில் ஒரு பிரதான பொருளாதார செயற்பாடு என்பது விவசாய உற்பத்திப்பொருட்களின் வியாபாரமும் மற்றும் சேவைகள் வழங்கப்படுதலும் ஆகும்.

- விவசாய உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய வியாபாரத்தின் மூலமாகஇ மாநகர சபைக்கு அதிகூடிய வருமானம் ஈட்டப்படுகின்றது.

- விவசாயப்பொருட்களுக்கான உரம் மற்றும் இரசாயனப்பொருட்கள் ஆகியனவைஇ நகரத்தினுள் பரவலாகக்காணப்படும் வர்த்தக நிறுவனங்களில் விற்கப்படுகின்றன.

- நகரத்திலும் நகரத்தைச்சுற்றியும்இ சுத்தமானதும் மற்றும் புதியதுமான காய்கறிகள் கிடைக்கப்பெறுகின்றன.

பலவீனம்

ை. நகர மத்தியில் போக்குவரத்து நெரிசல்

ஒரு நேரியல் நகரத்திட்டத்தினால் கொண்டுள்ள பண்டாரவளை நகர மத்திய பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசலானது அதன் செயல்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை ஊக்குவித்தது.

பண்டாரவளையின் இடவிளக்கவியலின் விளைவாகஇ குறைந்த அளவிலான மாற்று வழிகள் காணப்படுவதனால்இ நகர மத்தியில் கல்விசார்ந்த மற்றும் வர்த்தகம் போன்றவற்றின் ஈர்ப்பின் திறன் காரணமாகவும்இ வீதி வழிகளின் பக்கங்களில் இவைகள் காணப்படுவதன் காரணத்தினாலும் போக்குவரத்து நெரிசல் தோன்ற காரணமாக உள்ளது.

ை. வாகனத்தரிப்பு இடங்களின் பற்றாக்குறை

இடவிளக்கவியலின் விளைவாகஇ நேரியல் நகர அமைப்பினைக்கொண்டுள்ள பண்டாரவளைப்பகுதியினை அணுகும் எல்லா வீதிகளாகிய நான்கும்இ கரடுமுரடான சரிவுகள் வழியே காணப்படுகின்றன.

- நகரத்தின் உள்ளே 530 வரையிலான வழமையான வாகனத்தரிப்பு இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்இ அவற்றில் 320 வீதி ஓரமாக காணப்படுகின்றது.
- 210 இடங்கள் மட்டும் தனியான வாகனத்தரிப்பு

இடங்களாக அமைந்துள்ளது.

ைை. நகர மத்தியில் அபிவிருத்தி அடையாத காணி

காலனித்துவ காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நகரமாதலால் நகரத்தின் பெரும்பாலான காணிப்பகுதி அரசாங்க நிறுவனங்களுக்குச்சொந்தமானது.

உரு 5.1 : நகர மத்தியில் அபிவிருத்தி அடையாத காணி



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2022 ஆம் ஆண்டு

	காணியின் பெயர்	விஸ்தீரணம்	
1	வெலிமடை வீதி நீதிமன்ற வளாகத்திற்கு அருகில்	°.140.13ி	புகையிரத திணைக்களம்
2	வர்த்தக நிலையத்தின் பின்னால் உள்ள காணி	°.124.86ி	புகையிரத திணைக்களம்
3	சுரங்கப்பாதையினை அடுத்துள்ள காணி	°.85.2ி	புகையிரத திணைக்களம்
4	கூட்டுறவு சங்க காணி	°.82ி	கூட்டுறவு சங்கம்
	மொத்தம்	2யு.2சு .32.1ி	

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2022 ஆம் ஆண்டு

ளை. நீர்வளம் குறைதல்

பண்டாரவளை உள்ளடக்கிய மலைநாட்டுப்பகுதிகள் யூகலிப்டஸ்(நுரஉயடலிவரள) பயிர்ச்செய்கையின் விளைவாக நீண்டகால நீர் பற்றாக்குறையினை சந்திக்க நேர்ந்துள்ளது.

உமாஓயா பல் நோக்கு செயற்திட்டத்தின் கூறுகளில் ஒன்றாகியஇ நிலத்தடி சுரங்கப்பாதையில் உள்ள ஒரு தொழில்நுட்ப தவறுதல் காரணமாகஇ அப்பகுதிகளிலான நீர் வளங்கள் ஒரு குறைந்த அளவில் காணப்படுகின்றது.

எ. ஏற்ற கழிவு நீர் முகாமைத்துவ முறைமை இல்லாமை

- ஒரு சிறந்த கழிவு நீர் முகாமைத்துவ முறைமையின் குறைபாட்டின் விளைவாக நகரத்தின் மழைநீர் செல்லும் வடிகான்கள் மூலமாகவே கழிவு நீரும் அகற்றப்படும் தேவை காணப்படுகின்றது.

- மழை நாட்களின் போது கான்கள் நிரம்பி வழிவதன் காரணத்தினால் இக்கான்களில் இருந்து ஒரு கடும் துர்நாற்றம் வீசுகின்றது.

சந்தர்ப்பங்கள்

ை. உத்தேசிக்கப்பட்ட பண்டாரவளைஇ டியத்தலாவைஇ ஹப்புத்தளை இலான ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம்

- இச்செயற்திட்டமானதுஇ உமா ஓயா பல்நோக்கு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சுரங்கப்பாதையினால் நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்காகக்கொண்டுஇ தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

- இச்செயற்திட்டத்தின் நோக்கம் யாதெனில் உமா ஓயாவின் அருகே மேலும் ஒரு கிளை ஆற்றினை கடப்பதற்கும் மற்றும் டயறாபா(னுஎயசயடிய) நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதுடன் அதில் இருந்து பண்டாரவளை ஹப்புத்தளை வெலிமடை

எல்லநடடய) ஹலிஅலா(ர்யடை யடய) ஆகியவற்றின் பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள 64 கிராமப்புற சேவைப்பகுதிகளிற்கு நீர் வழங்குதல் ஆகும்.

- 2042 ஆம் ஆண்டளவில் 107இ839 பயணிகளுக்கு சேவைகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 16427 மில்லியன் ஆகும்

ை. உத்தேசிக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு செயற்திட்டம்

- இச்செயற்திட்டமானது திண்மக்கழிவு முகாமைத்துவ வளாகத்தின் ஒரு பகுதியிலேயே நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட

- இச்செயற்திட்டத்தின் மூலமாக பவுசர் வாகனங்கள் மூலம் சேகரிக்கப்படும் கழிவு குழி நீருக்கு ஒரு தீர்வாக கழிவுநீர் சுத்திகரிப்பு நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல்கள்

ை. நிலச்சரிவு அபாயங்கள் ஏற்படுதல்

- நகரத்தில் காணப்படும் உயர்ந்த சனத்தொகைச்செறிவுடன் வதிவிட பாவனைக்காக செங்குத்தான சரிவுகளல் கட்டிட பாவனைக்கு உள்ளாக்கும் தன்மை காணப்பட்டது.

- பண்டாரவளை பிரதேச செயலகத்தின் 2019 ஆம் ஆண்டின் அனர்த்த தரவுகளுக்கு இணங்கஇ பண்டாரவளை மேற்குஇ பண்டாரவளை கிழக்கு தன்திரியா மற்றும் கினிகம ஆகிய இடங்களில் விசேடமாக 2018 ஆம் ஆண்டில் நிலச்சரிவு அனர்த்தங்கள் அதிக அளவில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5.2.3 பண்டாரவளையினைஇ பிராந்தியத்தில் "ஒரு செயற்திறன் உள்ளதும்

ஸ்தீரணமுமான பொருளாதார மையமாக" உருவாக்குதல்

வலிமைகள்

(ை) காணப்படும் விவசாய சேவைகள் மற்றும் விவசாய உற்பத்திகள்

- பண்டாரவளையில் ஒரு பிரதான பொருளாதார செயற்பாடான விவசாயத்தொழில்களுக்குஇ நகரத்திற்கு அருகாமையில விவசாய சேவைகள் மற்றும் விவசாய உற்பத்திப்பொருட்களின் சந்தை அமைந்திருத்தல்

- மொத்த வியாபாரச்சந்தை தொடர்பான வசதிகளுக்கான ஏற்பாடுகள்இ சில்லறை வியாபாரச்சந்தைக்கான தொகுதிகளின் ஏற்பாடுகள்இ வாராந்த சந்தைக்கான தேவைப்பாட்டு வசதிகளிற்கான ஏற்பாடுகளும் காணப்படுகின்றது

- உள்கட்டமைப்பு ஏற்பாடுகளின் விளைவாக உருவாகும் வருமானங்களின்இ மத்தியில் விவசாய உற்பத்திப்பொருட்களின் மூலமாக 35மூ ஆன உயர்ந்த வருமானம் மாகாண சபைக்கு கிடைக்கப்பெறுகிறது.

- நாள் ஒன்றிற்குஇ பண்டாரவளை நகரத்தில் 200 மெட்ரிக் தொன் மரக்கறிகள் சேகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

- இவ்வகையான சேவைகளுக்குஇ கார்கில்ஸ்(ஊயசபடைடள) போன்ற நிறுவனங்களின் ஈடுபாடு மற்றும் மலர்கள் வாங்குவதற்கான ''பியூட்டிபுள் புளோரா''(டீநயரவகைரட குடழசய) போன்ற தனியார் நிறுவனங்கள் ஆகியவைஇ பண்டாரவளை பூக்கள் மற்றும் மரக்கறித்தோட்டங்கள் ஆகியவற்றில் தனித்துவத்தினை உறுதி செய்கின்றன.

(னை) காணப்படும் விடுதியகங்கள் மற்றும் தங்குமிட வசதிகள்

- மாநகரசபை எல்லைக்குள்ளே பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணிகளின் விடுதியகங்களின் எண்ணிக்கை 69 ஆகும். மேலும் நகரத்தினைச்சுற்றிக்காணப்படும் ஹப்புத்தளை எல முதலிய சுற்றுலாப்பயணிகளின் விடுதியகங்களும்இ பண்டாரவளைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளுக்கு வேண்டிய வசதிகளை வழங்குகின்றனர்.

- வருமானத்தில் 50மூ இற்கு மேலானதுஇ சுற்றுலாப்பயணிகளின் விடுதியகங்களில் இருந்து மாநகரசபையின் வணிக உரிமத்தின் வாயிலாக கிடைக்கப்பெறுகின்றது என அறிய முடிவதுடன். மேலும் சுற்றுலாத்துறையானது நகரத்தின் பொருளாதாரத்தில் ஒரு உயர்ந்த இடத்தினையும் கொண்டுள்ளது.

- நகரத்தில் உள்ள கட்டிடங்களில்இ நிர்மாணிப்புக்கான பிரதான வீட்டுத்தொகுதிக்கு மேலதிகமாகஇ சுற்றுலாப்பயணிகளுக்கான வீடமைப்பு அலகுகளின் நிர்மாணிப்புக்கான முறைமையினையும் அடையாளங்காண முடிகின்றது.

(ை) பிரபல பாடசாலைகளும் மற்றும் தனியார் கல்விசார் நிறுவனங்களும்

- நகரத்தின் ஒரு தனித்துவமான அம்சமாகிய கல்வித்துறையின் வாயிலாக நகரம் பிரபலம் பெற்றதுடன்இ மேலும் அது பொருளாதாரத்தினை உயர்த்தவும் உதவி புரிந்துள்ளது.

- மாநகர சபைப்பகுதியின் உள்ளே 25இ000 வரையிலான பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதுடன்இ மேலும் நகரத்தின் வெளியில் இருந்து 10இ000 மாணவர்கள் ஒரு நாளாந்த அடிப்படையில் தனியார் கல்விக்காக வருகை தருகின்றனர்.

- முன்னணி தனியார் கல்வி நிறுவனங்கள் காணப்படுதலும் நகரத்தின் புகழினை அதிகரித்துள்ளது.

- நகரத்தின் 40மூ ஆன பிரயாணிகளின் சனத்தொகையானது கல்விஇ புத்தக களஞ்சியம்இ உணவகங்கள் மற்றும் மாணவர்களுக்கான தங்கும் இடவசதிகள் ஆகிய நோக்கங்களின் விளைவாகஇ வருகை தருவது நடைமுறைக்கு வந்துள்ளது.

ை. பல்வகைப்பட்ட வணிக மற்றும் வர்த்தக சேவைகள்

- நகரத்தில் பல்வேறு வகைப்பட்ட வர்த்தக சேவைகள்இ விவசாய சேவைகள்இ புடவை வகைகள்இ புடவை வர்த்தக ஸ்தாபனங்கள்இ கல்விசார் நூல்கள் விற்பனை ஸ்தாபனங்கள் போன்றவை காணப்படுகின்றன.

- உரிமம் பெற்றுள்ள வணிக வங்கிகள்இ உரிமம் பெற்ற விசேட வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் போன்ற எல்லா வகையான நிதி நிறுவனங்களும் காணப்படுகின்றமையினால்இ வியாபார சமூகத்திற்கும் மற்றும் நகரத்தின் பயணம் செய்யும் மக்களுக்கும் வசதியான ஒன்றாக அமைந்துள்ளது.

பலவீனம்

ை. நகர மத்தியில் போக்குவரத்து நெரிசல்

- நகரத்தின் அணுகுமுறைமை அதன் செயற்திறனை எடுத்துக்காட்டுவதுடன்இ மேலும் அது பொருளாதாரத்தினை நேரடியாகப்பாதிக்கின்றது.

- நகரத்தினைச்சென்று அடைய எடுக்கும் நீண்ட நேர காலம் மற்றும் சுற்றாடலில் உள்ள மற்றய நகரங்களிற்கு பிரயாணம் செய்ய தேவைப்படும் நேர காலம்

(ை)குறைந்த அளவிலான வாகனத்தரிப்பு வசதிகள்

எல்லாத்துறைகளுக்கும் சேவைகளை வழங்கும் ஒரு வளம் பெற்ற பகுதியாக நகரம் காணப்பட்ட போதிலும்இ வாடிக்கையாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் வாகன வசதிகளின் குறைப்பாட்டினால்இ அவர்கள் நகரத்தினைத்தவிர்த்து வேறு இடங்களுக்குத்திரும்புகின்றனர்.

(ை) நகர மத்தியில் அபிவிருத்தி அடையாத காணிகள்

- பண்டாரவளை நகர மத்தியில் உள்ள காணியின் பெறுமதியானதுஇ பிராந்தியத்தில் உள்ள மற்றய நகரங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் உயர்வாகக்காணப்படுகின்றது

- நகர மத்தியில் உள்ள பெரும்பாலான காணிகள் அரச ஸ்தாபனங்களிற்கு சொந்தமானது எனும் காரணத்தின் விளைவாகவும்இ மேலும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளையும்

அடிப்படையாகக்கொண்டு சரியான காணிப்பாவனைக்கு கவனம் செலுத்துவதில் உள்ள இயலாமையின் விளைவாகவும்இ அதிக அளவிலான பெறுமதிமிக்க காணிகள் முழுமையாக அபிவிருத்தி அடையாத நிலையில் காணப்படுகின்றன.

(ஸை) நீர் வளங்கள் குறைவடைதல்

பண்டாரவளை நகரத்தில் காணப்படும் நீரின் அளவு சமீபகால அபிவிருத்தி செயற்திட்டங்களில் போதுமான பெறுபேறுகள் கிடைக்காததன் விளைவினாலும்இ மற்றும் நீண்டகால பொருளாதாரத்திற்கான காடு வளர்ப்பு விளைவினாலும்இ மற்றும் நிலக்கீழ் நீர்மட்டத்தில் ஏற்பட்ட குறைவினாலும் நீர் வழங்கள் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது.

- மாநகர சபை நீரை வழங்குவதற்கும் மற்றும் வதிவிடவாளர்கள் நீரை பெற்றுக்கொள்வதற்கும்இ மேலதிக பணத்தினைச்செலவு செய்ய வேண்டியுள்ளது.

ஸை. மொத்த விற்பனைச்சந்தையுடனான தொடர்பிற்கு குறைந்த அளவிலான உட்கட்டமைப்பு காணப்படுகின்றது

- பண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தை அற்றம்பிற்றிய வீதி வழியே தற்போது உள்ள மூன்றாம் கட்டை வீதியில் அமைந்துள்ளதுஇ மேலும் இது குறைந்த வசதிகளுடன் இயங்கிய போதிலும் பெரிய அளவிலான பகுதிக்கு மரக்கறிகளை விநியோகிக்கின்றது.

- குறைந்த அளவிலான லொறிகளுக்கான தரிப்பிட வசதிகளைக்கொண்டுள்ளமையினாலும் மற்றும் சுகாதார வசதிகளின் குறைபாடுஇ சுலபமான அணுகு முறைக்கான குறைபாடுஇ உணவகங்களின் பற்றாக்குறைஇ நிதி வசதிகளுக்கான பற்றாக்குறை போன்றபிரச்சனைகள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

- மூன்றாம் கட்டை வீதி வழியே மொத்த வியாபார சந்தை அமைவிடம் கொண்டுள்ளதன் விளைவாகஇ பங்குச்சந்தை செயற்பாட்டு நேரங்களின் போதுஇ வழமையான போக்குவரத்து செயற்பாடுகளுக்கு இவ் வீதியினை பயன்படுத்த முடியாது.

- அத்துடன்இ மொத்த விற்பனைச்சந்தையினைச்சூழ்ந்து கடுமையான போக்குவரத்து நெரிசல் உள்ள நாட்களில்இ அற்றம்பிற்றிய வீதியும் நெரிசலுக்கு ஆளாவதுடன் மேலும் பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையினை அணுகும் வாகனங்கள் ஒரு பெரும் பிரச்சனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

ஸைை. தனியார் துணை வகுப்புகள் நடாத்தப்படும் இடங்களில் குறைந்த அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள்

- தனியார் மேலதிக வகுப்புகள் நடாத்தப்படும் இடங்களுக்கான கட்டிடங்களில்இ ஏற்றுக்கொள்ளக்கூடிய நிர்மாணிப்பினை காணக்கூடியதாக இல்லை

- பாதுகாப்பு இல்லாமைஇ காற்றோட்டக் குறைபாடு மற்றும் வகுப்பறையில் வெளிச்சம்இ சுகாதார வசதிகள் போதாமை போன்றவற்றினை அடையாளம் காணக்ககூடியதாக உள்ளது.

சந்தர்ப்பங்கள்

ை. நகரத்தினைச்சுற்றிய விவசாயப்பயிர்கள்

- அருகாமையில் அமைவிடங்கொண்டுள்ள அற்றம் பிற்றியஇ காஹவெலஇ வெலிமடைஇ நெலுவாஇ டிமோதரஇ எலாஇ நமுனுக்குலஇ பல்லகெற்றுவஇ ஹப்புத்தளைஇ டியத்தலாவஇ வெல்லவாயா போன்ற விவசாயப்பயிர்கள் வளர்க்கப்படும் பகுதிகளில் இருந்து அவை சேகரிக்கப்பட்டுஇ பண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தையின் ஊடாக விநியோகம் செய்யப்படுகின்றது.

- இப்பகுதிகளில் காணப்படும் புதிய மலர்களின் வியாபாரங்களும் நகரத்திற்கு தனித்துவமான சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது.

- அநேகமான வேளைகளில் இத்தொழில் முனைவோர்இ தங்களது உற்பத்திப்பொருட்களை ''பண்டாரவளை'' எனும் பெயருடன் பிரபலபடுவதற்கு ஆர்வங்காட்டுகின்றனர்.

அச்சுறுத்தல்கள்

ை. தற்போதைய தொற்றுநோய் நிலைமை

- பிரதான பொருளாதாரத்துறையான சுற்றுலாத்தொழில் காணப்படும் பண்டாரவளை நகரமானதுஇ தொற்றுநோய் நிலைமை காரணமாகஇ சுற்றுலாப்பயணிகளின் வருகையின்மையின் விளைவாகஇ தொழில்களை இழந்ததுடன் மேலும் வருமானம் ஈட்டும் ஆதாரங்களையும் இழந்தது.

- அபிவிருத்தித்செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் எழுந்துள்ள கஷ்டங்கள்

ை. உலக நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டன.

ை. பண்டாரவளை நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் பண்டாரவளை நகர பளப்பளவானது நான்கு(4) பிரதான அபிவிருத்தி வலயங்களாக பிரிக்கப்பட்டு அப்பிரதான அபிவிருத்தி வயங்கள் எதிர்பார்ராப்பட்ட அடர்த்தி அபிவிருத்தி அடிப்படையில் உப வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் நிலப்பகுதியானது எதிர்ப்பார்க்கப்பட்ட அபிவிருத்தி அடர்த்தி மற்றும் அபிவித்தி வலயத்திலான அபிவிருத்தி செய்யக்கூடிய காணி இருப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். முன்னய அபிவிருத்திக்கட்டுப்பாடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட தளப்பரப்பு வீதத்தினை மாற்றீடு செய்வதற்கான புதிய கருத்தாக்கமானதாக வலயப்பகுதி

விளங்குகின்றது. இது சில பகுதிகளில் சில தருணங்களில் அபிவிருத்தியின் தீவிரத்தன்மையை தீர்மானிக்கும்.

ளை. இதன் பிரகாரம் பண்டாரவள நகர மத்தியானது கலப்பு அபிவிருத்தி வலயமாக நடுத்தர அடர்த்தியுடன் அபிவிருத்தி செய்ய பிரேரிக்கப்பட்டுள்ளது. இதன் குறிக்கோளானது நகரின் இயல்பான சுற்றாடல் கூர் உணர்வு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை தாங்கிக்கொள்ளக்கூடியதாக பயன்படுத்துவதாகும் அத்துடன் சுற்றுலாத்துறை அபிவிருத்தியானது எதிர்பார்க்கப்டுகின்றது. தற்போதுள்ள உயர் வதிவிட தேவைப்பாட்டு அடிப்படையில் நடுத்தர அடர்த்தியான வதிவிடப்பகுதிகளும் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்டுகின்றது பாதுகாப்பு வலயங்களுள் நகரின் இயல்பான அழகினை உபயோகித்து சுற்றுலாத்துறை தொடர்பான அபிவிருத்திக்கு மட்டுமே பிரேரிக்கப்பட்டுள்ளது.சகல இவ்வசதிகளையும் பெறுவதற்கு தற்போதுள்ள இயலுமைகள் மற்றும் சந்தர்ப்பங்களை கூராய்வு செய்து நகரின் தற்போதுள்ள புவியியல் அமைவானது நகரின் அபிவிருத்தியினை கட்டுப்படுத்துவதற்கான பிரதான மூலதத்துவம் என அறியப்படுகின்றது. ஆகவே அதிகுறைவான சுற்றாடல் சேதம் அடிபபடையில் தாங்கக்கூடிய அபிவிருத்தியின் அதியுயர் நன்மைகளைப்பெற்றுக்கொள்ளும் முகமாக பண்டாரவளைப்பகுதியில் நடுத்தர அடர்த்தி அபிவிருத்தியானது பிரேரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நகரின் எதிர்கால அபிவிருத்தியானது சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது அத்துடன் வயமிடல் திட்டம் மற்றும் வலய காரணியானது உள்கட்டமைப்பு வசதிக் வர்த்தக நடவடிக்கைகள் அபிவிருத்தி மற்றும் சனத்தொகை அடர்த்தி ஆகியனவற்றின் பகிர்ந்தளிப்பிற்கான முறைமையில் தயாரிக்கப்பட்டுள்ளது..

பண்டாரவளைக்கு சுற்றுலாப்பயணிகள் வருகை தருவதற்குஇ கருத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன. அவை எவையெனில்: இயற்கைக்காட்சியின் அழகு அத்துடன் சாதகமான காலநிலை ஆகியவற்றினை அனுபவிப்பதற்கு அவர்கள் விரும்புகின்றனர். ஆகையினால்இ இயற்கை காட்சி கொண்ட இடங்களின் அழகினை பாதுகாத்துக்கொள்வது கட்டாயமாகும். இதற்கு நகரத்தின் பொருளாதாரத்திற்கு நன்மைபயக்கக்கூடிய வகையில்இ கவர்ச்சிகரமான ரோஜா செடிகளின் வளர்ப்பினை பிரபல்யப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

01) ரோஜா சார்ந்த நிலத்தோற்றமிடுதலை மேம்படுத்தலும் மற்றும் விற்பனை தலங்களை அமைத்தலும்.(வீதிகளின் ஓரமான கட்டிடங்களின் முன்பாகஇ கட்டிடங்களின் மேல் மாடிகள்இ மொட்டை மாடிகள்)

02) நகர எல்லைகளுக்குள்ளே கட்டப்பட்ட எல்லா கட்டுமானங்களுக்கும் நிறமூட்டப்படும் போதுஇ பிரகாசமான நிறங்கள் பயன்படுத்தப்படுவது அனுமதிக்கப்படல் ஆகாது. அதாவதுஇ கறுப்புஇ பச்சைஇ மண்ணிறம் மற்றும் கடுமையான சிவப்பு போன்றவை). ஆனால் சாம்பல் மற்றும் வெள்ளை போன்ற நிறங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ள

பாகம்
6

அத்தியாயம் 6

திட்டம்

6.1 கருத்திட்டம்

பண்டாரவளை நக அபிவிருத்தித்திட்டத்தின் எண்ணக்கருவானது 2033ம் ஆண்டு அளவில் மலைத்தொடரில் ஒரு மலர்ந்த விடுமுறை நகரம் எனும் தொலை நோக்கினைக்கொண்ட ஒரு ரோஜா மலராகும் நகரமானது ஐந்து திசைகளில் ரோஜாவின் மத்தியின் ஊடாகச்செல்லும் ஐந்து திசைகளில் போன்ற(ளுவயஅயை டமைந) வீதிகளினால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. நகர மத்தியானது உயர்ந்த அடர்த்தி கொண்ட அபிவிருத்திப்பகுதி ஆகும். நகர மத்தியின் சுற்றாடல் பல்வேறு சுற்றுலா வலயங்கள் கலப்பு அபிவிருத்தி வலயங்கள் மற்றும் வதிவிட வலயங்கள் ஆகியவற்றினைக்கொண்டுள்ளது. நகரத்தின் கால நிலைக்கு அதிகம் சாதகமாக வளர்ச்சி அடையும் ரோஜா தோட்டம் நகரத்தின் அபிவிருத்திக்கு வண்ண நிறம் கொண்ட சின்னமாக(ளுலஅடிழட) சித்தரிக்கப்படுகின்றது.


எதிர்காலத்தில் பண்டாரவளை நகரம் 2033 ஆம் ஆண்டில் அபிவிருத்தித்திட்டம் வாயிலாக 100மூ சுற்றுலா சேவைகளை வழங்குவதன் மூலமாக ஊவா மாகாணத்தில் ஒரு சுவாத்தியமான சுற்றுலா ஸ்தலமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இணங்க சுற்றுலாத்துறைக்கு சாதகமான வகையில் நகரத்தின் ஒத்திசைவு மற்றும் நகர மத்தியின் காணிப்பாவனை ஆகியன மேம்படுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வலையமிடுவதன் வாயிலாக நகரத்தின் அபிவிருத்தி

மூலோபாய செயற்திட்டமானது வெலிமடை வீதி மற்றும் அற்றம்பிற்றிய வீதி ஆகியனவற்றினை நோக்கி பதுளை – கொழும்பு வீதியின் நேரியல் அபிவிருத்தியினை விஸ்தரிப்பதற்கு கவனம் செலுத்தில் அடையாளங்கண்டுள்ளது. அத்துடன் நகரத்தின் பாதுகாப்புப்பகுதிகளுக்கு நகரத்தினைச்சுற்றியுள்ள அதி உயர் உணர்திறன் கொண்ட பகுதிகளை திறம்பட பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

படம் இல. 6.1 கருத்திட்டம்





6.2 உத்தேசிக்கப்பட்ட காணிப்பாவனைத்திட்டம்

பண்டாரவளை அபிவிருத்தி அழுத்த பகுப்பு ஆய்வினை ஆய்வு செய்தபோது நகர மத்தி உயர்ந்த அபிவிருத்தி உள்ளாற்றல் கொண்டுள்ளது என அடையாளங்காணப்பட்டது. ஆகையினால் நகர மத்தியின் காணிப்பாவனையானது விரும்பிய தொலை நோக்கினை அடைவதற்கு அதிகளவில் விரும்பிய திறம்பட பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இணங்க பண்டாரவளை நகரத்தின் உத்தேசிக்கப்பட்ட காணிப்பாவனையானது பின்வருமாறு மாறுதல்களுக்கு உட்படுத்தப்படும்.

- **நகர மத்தியின் உள்ளே காணப்படும் குறைந்த பயன்பாட்டுக்கு உள்ளான காணிகளை சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு பயன்படுத்துதல்**
- **நகர மத்தியின் உள்ளே வர்த்தக பாவனைகளை மேம்படுத்துவதற்கு வசதிகளை வழங்குதல்**
- **வெலிமடை பாதையினை நோக்கி அபிவிருத்தி முறைமைகளை அடிப்படையாகக்கொண்டு நகரத்தின் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் தன்மையினை விரிவுபடுத்துதல்**
- **பதுளை நோக்கிய பிரதான வீதியினை வர்த்தக பாவனைகளுக்கு முன்னுரிமை வழங்குவதன் வாயிலாக மேம்படுத்துதல்**

அதற்கு இணங்க நகர மத்தியின் உள்ளே அமைவிடம் கொண்டுள்ள உயர் வர்த்தக பெறுமதி வாய்ந்த ஆனால் குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் காணிகளை சுற்றுலா மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் மேலும் தற்போதைய அபிவிருத்தியானது நகர மத்தியின் உள்ளே உயர்ந்த அடர்த்தி உடன் கூடிய அபிவிருத்தியுடன் இரப்படிப்பார்க்கப்படும் அல்லது மும்மடங்காகும். இதன் கீழே ஏழு காணிகளின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் நகர மத்தியில் அபிவிருத்தி அடையாத மற்றும் குறைந்த பாவனை கொண்டுள்ள அரச காணிகளை அடையாளங்கண்டு அவற்றினை பலமாடி அபிவிருத்தி செயற்திட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பலமாடி கட்டிட செயற்திட்டங்கள் கலப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சுற்றுலாப்பயணிகளுக்கு பொழுது போக்கு வசதிகள் பொதுவான மற்றும் திறந்த வெளிகள் ஆகியனவற்றினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. தரைத்தளங்கள் வர்த்தக சூழலுக்கு மேலும் அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்படுவதுடன் மற்றும் மேல் மாடிகள் சுற்றுலாப்பயணிகளை கவரும் தன்மையினை உருவாக்கும் வகையில் கவர்ச்சியான பொது இடங்களாக அபிவிருத்தி செய்யப்படும். நகர மத்தியினை சுற்றுலாப்பயணிகளுக்கு ஒரு செயற்திறன் கொண்ட பகுதியாக அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நகர மத்தியில் ரோஜா வளர்ப்பிற்கு ஒரு சந்தையினை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் மற்றும் அதனால் நகரத்தின் இயற்கைக்காட்சியில் அழகினையும் அதிகரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மாநகர சபைக்கு உரித்தான தற்போதைய வர்த்தகத்தொகுதி அமைந்துள்ள காணியின் உள்ளேயும் மற்றும் புகையிரத நிலையினைச்சுற்றியுள்ள காணிகளிலும் பொருளாதார ரீதியாக ரோஜா செடிகளை வளர்ப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக இம்மலர்களை கொள்வனவு செய்யக்கூடிய இடங்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நகர மத்தியில் ரோஜா வளர்ப்பிற்கு ஒரு சந்தையினை உருவாக்குவதற்கு எதிர்பார்படுவதுடன் மற்றும் அதனால் நகரத்தின் இயற்கைக்காட்சியின் அழகினையும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மாநகர சபைக்கு உரித்தான தற்போதைய வர்த்தகத்தொகுதி அமைந்துள்ள காணியின் உள்ளேயும் மற்றும் புகையிரத நிலையத்தினைச்சுற்றியுள்ள காணிகளிலும் பொருளாதார ரீதியாக ரோஜா செடிகளை வளர்ப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக இம்மலர்களை கொள்வனவு செய்யக்கூடிய இடங்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பகுதியில் தற்போது உள்ள வரையறுக்கப்பட்ட அபிவிருத்தி சுற்றாடலுக்கு மேலாக வர்த்தக வீதியின் அபிவிருத்தியினை அதே உயரத்தில் உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் கீழே பிரதான வீதியின் வர்த்தக நிலையங்கள் மற்றும் தர்ம விஜயமாவத்தை ஆகியவை அவற்றின் தற்போது உள்ள வர்த்தக உள்ளாற்றலை அடிப்படையாகக்கொண்டு மேம்படுத்தடும். ஒரு அபிவிருத்தி அடர்த்தி வலயமானது வெலிமடை வீதியினை நோக்கி காணப்படும் இயற்கை அழகினைப்பயபன்படுத்துவதன் மூலமாக உருவாக்கப்படும்.

அதற்கு மேலாக நகரத்தின் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை தனியார் சுற்றுலாவின் மேம்பாட்டிற்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்ககத்திற்காக நீர்ப்பாசனத்திணைக்களம் அமைந்துள்ள காணியும் மற்றும் பிராந்திய கல்விக்காரியாலயம் அமைந்துள்ள காணியும் அடையாளங்காணப்பட்டுள்ளது.

மேலும் நகரத்தின் குறுக்காக முறையாகப்பரப்பப்பட்டு செயற்படுவதற்காக எல்லா நீர்வாக நிறுவனங்களையும் ஒரு வளாகத்திலேயே ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் நகரத்தின் நீர்வாக செயற்பாடுகளை வெலிமடை வீதியினை நோக்கிவிஸ்தரிப்பதற்கு எதிர்பார்ர்க்கப்படுகின்றது. அத்துடன் வெலிமடை வீதியின் அருகில் நீதிமன்ற சேவைகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான வசதிகளுடன் ஒரு நீதிமன்ற தொகுதியினை அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக கஹட்டிவெல சந்திக்கு(முயாயவவறைநடய துரஎவழை) நீதித்துறை சேவைகள் தொடர்பான ஒரு அபிவிருத்தியினை உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3 பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மூலோபாயம்

6.3.1 சேவைத்திட்டம்

6.3.1.1 குடியேற்றத்திட்டம்

பண்டாரவளை நகரப்பகுதியின் உள்ளே காணப்படும் காலநிலை மற்றும் சாதகமான உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக வதிவிடத்திற்கான தேவைப்பாடு அதிகமாகும். அத்துடன் நகரத்தில் உள்ள தரமானதும் மற்றும் பெயர்பெற்றதுமான கல்வி சேவைகளும் பாதிப்புக்குள்ளானது. தற்போது காணப்படும் நிலைகைளை பகுப்பாய்வு செய்யும் போது 2020 ஆம் ஆண்டிற்கான பிரதேச செயலகத்தின் மூலவள விபரக்குறிப்புகளின்படி நகரத்தில் உள்ள வீடுகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 808 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

அத்துடன் நகரத்தில் ஒரு வீட்டின் அளவு 3.3 ஆக சிறியதாக இருப்பதுடன் மேலும் நகர எல்லைகளின் உள்ளே கூட்டுக்குடும்பங்களைவிடத்தனிக்கப்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. மேலும் வாழ்வாதார பகுப்பு ஆய்விற்கு இணங்க நகரத்தின் 80மூ ஆன

காணிகள் வாழ்வதற்கு உகந்த உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன. ஆகையினால் நகரத்தின் உள்ளே ஒரு ஸ்தீரமான வதிவிட சுற்றாடலை உருவாக்குவதற்கான உள் ஆற்றல் காணப்படுகின்றது. அதற்கு இணங்க தற்போது காணப்படும் வீட்டுப்பற்றாக்குறை மற்றும் எதிர்கால வதிவிட தேவைப்பாடுகளை எதிர் கொள்வதற்கு பின்வரும் மூலோபாயங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

1. நடுத்தர வருமானங்கொண்ட வடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள்

அட்டவணை இல. 6.1 நடுத்தர வருமானங்கொண்ட வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள்

காணி	அளவீட்டுத்திட்டம்	காணி விஸ்தீரணம்
பூனகல வீதி -மாநகரசபை விடுதிக்கு அருகமைந்துள்ள காணி		4 ஏக்கர்
சப்பானி பில்லெய் இனது காணி		13 ஏக்கர்
சுரங்கத்தின் அருகமைந்துள் புகையிரத திணைக்களத்திற்கு உரித்தான காணி	இல.2436	3 றுட் 4.86 பேர்ச்
தோல்பொருள் காணிக்கு அருகே அமைந்துள்ள நீர்ப்பாசனத்திணக்களத்திற்கு சொந்தமான காணி	டீ.ீ.டீனுே.ீ.98.ீ.222	6 ஏக்கர்
சிறிய குசும்வித்தியாலத்திற்கு அருகில் அமைந்துள்ள மாநகர சபையின் காணி	இல.ஏ 317	1 ஏக்கர் 3 றுட் 32.8 பேர்ச்

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2022

படம் இல. 6.2 : நடுத்தர வருமான வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள்



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை - 2023

1. ஒதுக்கீட்டு தோட்டங்களின் மேம்பாடு(யுடடழவஅநவெ பயசனநளைபெ)

வலயமிடும் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வலயங்களிலும் அபிவிருத்தி செயற்பாடுகள மேற்கொள்ளப்படும் போது ஒதுக்கீட்டு தோட்டங்கள் எனும் எண்ணக்கருவிற்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் மேலும் அதற்கென ஒதுக்கப்பட்ட துண்டின் சதவீதத்திற்கு இணங்க தளப்பகுதியின் விகிதா சாரத்தினை அதியுயர்ந்த 30மூ வரையில் உயர்த்துவதற்கு கருத்தில் கொள்ளப்படும்.

நுஒ:-

காணித்துண்டில் இருந்து ஒதுக்கீடு	**தளப்பகுதியின் விகிதாசாரம்**
20மூ	20மூ
35மூ	**30மூ**

2. வலயமிடும் ஒழுங்குவிதிகள் வாயிலாக நிலையான வதிவிடப்பகுதிகளை மேம்படுத்துதல்

வதிவிட வலயம் - வதிவிட செயற்பாடுகளுக்கான குறைந்த அளவு காணி விஸ்தீரணம் 10 பேர்ச் ஆகும்.

3. வலயமிடும் ஒழுங்கு விதிகள் வாயிலாக ஆடம்பர வகையிலான சுற்றுலா குடியிருப்புத்தொகுதியினை மேம்படுத்துதல்

6.3.1.2 உத்தேசிக்கப்பட்ட நிர்வாக சேவைத்திட்டம்

பண்டாரவளை நகரத்தின் ஒரு 20மூ மான மாற்றுப்பயணிகளின் சனத்தொகையானது அப்பிரதேசங்களின் நிர்வாக சேவைகள் பெறுவதற்கும் மற்றும் தொழில்களுக்காகவும் வருகை தரும் சனத்தொகையினை பிரதிநித்துப்படுத்தும் பண்டாரவளை பிராந்தியத்திற்கு சேவை வழங்கும் பல நிர்வாக முகவர்கள் நகரத்தின் உள்ளே அமைந்துள்ளடதுடன். ஆனால் இதில் பல நிறுவனங்கள் நகரத்தின் உள்ளே பெறுமதி மிக்க காணியில் அமைந்துள்ளதுடன் மேலும் நகரம் பூராகவும் இந் நிறுவனங்கள் பரவிக்கிடக்கின்றமை பிரச்சனைக்குரியதாக காணப்படுகின்றது. பண்டாரவளை அபிவிருத்தித்திட்டம் 2033 இனது தொலை நோக்கிற்கு அஇணங்க தற்போது உள்ள நகரமத்தியின் பாவனைகளை இணங்க தற்போது உள்ள நக மத்தியின் பாவனைகளை வர்த்தகம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளுக்கு திருப்புவதற்கு இந்த நிறுவனங்களை நகரக்கட்டமைப்பிற்கு உள்ளே அதிகம் வசதியான இடங்களின் மீழவும் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை இல 6.2 நிர்வாகத்தொகுதி செயற்திட்டம்


நீர்ப்பாசனத்திணைக்களம்	காணியின் உள்ளே கூட்டுறவு காரியாலயம் மற்றும் களஞ்சியம் அமைந்துள்ளது.
வலய கல்வி காரியாலயம்	காணியின் உள்ளே கூட்டுறவு காரியாலயம் மற்றும் களஞ்சியம் அமைந்துள்ளது
மாவட்ட நீதிமன்றம்	காணியின் உள் நீதியத்நீதிமன்றம் அமைந்துள்ளது

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2023

அதற்கு மேலாக தற்போது பண்டாரவளை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள இடத்தில் அதனை விரிவுபடுத்துவதற்குப்பதிலாக பொலிஸ் அட்சியத்தகர்(ளரிநசவைநனெநவெ) காரியாலயம் தற்போது அமைந்துள்ள காணியினுள் பொலிஸ் நிலையத்தின் எல்லா எதிர்கால மேம்பாடுகளையும் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சீவாலி வீதி(ளுநநஎயடை சுழயன) இல் அமைந்துள்ள மாநகரசபை காணியில் மாநகரசபையின் மீழ் விரிவாக்கத்தினை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கு இணங்க பண்டாரவளை நகர அபிவிருத்தித்திட்டம் 2033 இன் வாயிலாக வெலிமடை வீதியினை நோக்கிய ஒரு நிர்வாக சேவகளின் அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுகின்றது. இது கஹரிவெல(முயாயவவநறநடய) சந்திக்கு அருகே உள்ள நீதிமன்றத்திற்கு தொடர்புபடும் ஒரு நகர சுற்றாடலை ஏற்படுத்தும். கஹற்ரிவெல சந்திக்கு அருகாமையில் உள்ள உத்தேசிக்கப்பட்ட வர்த்தக மையத்தின் உள்ளே சட்டத்தரணிகளின் தனியார் நிபுணத்துவ சேவைகள் அமைக்கப்படும்.

உரு 6.3 : உத்தேசிக்கப்பட்ட நிர்வாக தொகுதியும் மற்றும் சேவைகளின் பகிர்வும்



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2023

6.3.1.3 சுகாதார சேவைத்திட்டம்

பண்டாரவளை அபிவிருத்தித்திட்டம் 2023-2033 இனது எதிர்பார்த்த தொலை நோக்கிற்கு இணங்க நகரத்தின் உள்ளே தற்போது காணப்படும் சுகாதார சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒரு தேவைப்பாடு உள்ளது. இது நகரத்திற்கு 2033 ஆம் ஆண்டளவில் ஒரு உயர்ந்த மாற்றுப்பயணிகளின் சனத்தொகையினது எதிர்பார்ப்பின் விளைவாகும் என்பதுடன் நகர சமூகத்தினை ஒரு செழிப்பான உட்கட்டமைப்பு கொண்ட சமூகமாக மாற்றி அமைப்பதற்கான நோக்கங்களை அமைத்தலும் ஆகும். அதற்கு இணங்க பின்வரும் மூலோபாயங்களின் வாயிலாக சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கு உத்தேசிக்ககப்பட்டுள்ளது.

(i) பண்டாரவளை மாவட்ட வைத்திய சபையினை 'யு' தர ஆதார வைத்தியசாலையாக உயர்த்துதல்.

(ii) தற்போதைய வைத்தியசாலையின் வளாகத்தினை விரிவாக்கம் செய்தல்

(iii) வைத்தியசாலை வளாகத்தினை ஊதியர் தங்கும் இடங்கள் தரிப்பிடங்கள் மற்றும் வைத்தியசாலை கழிவு முகாமைத்துவ அலகுகளுடன் விரிவாக்கம் செய்தல்

(iv) சுற்றுலாப்பயணிகளின் ஆடம்பர கட்டணம் செலுத்தும் படுக்கை ஒதுக்கீடு(றுயசனள) உருவாக்குதல்

படம் இல 6.4 உத்தேசிக்கப்பட்ட பண்டாரவளை ஆதார வைத்தியசாலை வளாகம்



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை 2023

6.3.1.4 கல்வி வசதிகள்

பண்டாரவளை நகரத்தின் தனித்துவமான குணாம்சம் கொண்டுள்ள கல்வி சேவைகள் பயணம் செய்யும் சனத்தொகையின் 40மூ ஆனோருக்கு சேவைகளை வழங்குகின்றது. இதன் மூலமாக நகரத்தின் பொருளாதார பொறிமுறையானது ஒரு விசேடமான பங்களிப்பினைப்பெற்று கொள்கின்றது.

		வேளைகளில் நகரத்திற்கு எவ்விதமான வருமானமும் கிடைப்பதில்லை. அத்துடன் பிராந்தியத்தின் பிரதான வர்த்தக மத்தியாக நகரத்தின் உள்ளே வர்த்தக மத்தியாக நகரத்தின் உள்ளே வர்த்தக சேவைகளுக்கு ஒரு உயர்ந்த தேவைப்பாடு காணப்படுகின்றது. மேலும் நகர மத்திலில் காணிகளுக்கு ஒரு உயர்ந்த தேவைப்பாடு காணப்படுகின்றது என்பதையும் கருத்தில் எடுக்கவேண்டியது முக்கியமானதாகும். ஆகையினால் இவ்வளாகத்தில் ஒரு பல மாடிகள் கொண்ட வர்த்தக தொகுதியின் தேவைப்பாடு எழுந்துள்ளது. அதற்கு இணங்க சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் தன்மையினை உருவாக்கக்கூடிய உணவகங்கள் கடைகள் திறந்த வெளிகள் ஆகியன இருத்தல் வேண்டும். மேலும் பொது மக்கள். தமதுநாளாந்த தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதும் அதனால் வர்த்தக சமூகத்தினை மேம்படுத்தக்கூடியதுமான கடைகள் உள்ளடங்கிய பல்வேறு வகை கொண்டுள்ள ஒரு பலமாடி வர்த்தகத்தொகுதியின் தேவைப்பாடு காணப்படுகின்றது. இது சுற்றுலாப்பயணிகளுக்கு வசதிகள் உடனான ஒரு திறந்த பகுதியாக மொட்டை மாடியினை உருவாக்குவதுடன் நகரத்திற்கு உயர்ந்த வர்த்தக தேவை கொண்டுள்ளதும் நகரத்திற்கு கவர்ச்சியினைக்கொடுக்கும் இடமாகவும் அமையும். மேலும் இவ்வளாகத்தில் இருந்து பண்டாரவளை சில்லறை வியாபாரச்சந்தைக்கும் உகந்த இடத்தினை வழங்கக்கூடியதாக இருக்கும். அதற்காக இக்கட்டிடத்தில் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தியில் இருந்து ஒரு மாடியினை ஒதுக்குவது உகந்ததாக அமையும்.
	செயற்திட்த்தின் நோக்கங்கள்	• **நகரத்தின் உள்ளே காணப்படும் அபிவிருத்தி குறைவான காணிகளை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்துதல்.** • **சுற்றுலாப்பயணிகளுக்கு வழங்குவதற்கு உயர்தர வணிக இடங்களை உருவாக்குதல்** • **நகரத்தின் உள்ளே சில்லறை வியாபாரச்சந்தைகளுக்கு ஒரு இடத்தினை ஒதுக்குதல்.** • **நகரத்தில் உயர்வான அபிவிருத்தியின் உள்ளே திறந்த வெளிகளை உருவாக்குதல்.** • **வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்துதல்.** • **நகரத்தின் உள்ளே கவர்ச்சியான நகர்புற இடங்கள் மற்றும் தோற்றத்துக்கான இடுக்கு வழிகளை உருவாக்குதல்.**
	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய விரும்பத்தக்க திறந்த வெளிகள்.** • **உணவு வழங்கும் வசதிகள்.** • **பொதுவான வர்த்தக செயற்பாடுகளுக்கான பிரதேசங்கள்** • **பார்வைக்குரிய அமைவிடங்களின் அபிவிருத்தி** • **வாகனத்தரிப்பிடங்கள்.**
	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும் மற்றும்	புகையிரத திணைக்களம் நகர அபிவிருத்தி அதிகாரசபை பண்டாரவளை மாநகர சபை

	அதனைப்பராமரித்தலும்	

ஏழு காணிகளின் அபிவிருத்தி செயற்திட்டம்

3. கலப்பு அபிவிருத்தி செயற்திடம் – நகர மத்தி கூட்டுறவு காணி


	செயற்திட்டத்தின் முன்மொழிவு	அபிவிருத்தி குறைவான காணியை கலப்பு வர்த்தக அபிவிருத்திக்கு பயன்படுத்தல்
	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>தர்மவிஜய வீதி தற்போதைய கூட்டுறவு காணி</td></tr></table>
	அணுகுமுறை	தர்ம விஜய வீதி
	அமைவிட படவரைவு	
	தற்போதைய பாவனை	தற்காலிக தனியார் பேரூந்து தரிப்பிடம்
	காணி உரிமையாளர்	கூட்டுறவு திணைக்களம்
	காணி விஸ்தீரணம்	144 பேர்ச்
	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளையானது ஒரு வரையறுக்கப்பட்ட பகுதியில் பரந்துவிரிந்த நகரமாக இருப்பதனால் நகர மத்தியில் உள்ள அபிவிருத்தி குறைவான காணி வர்த்தகம் மற்றும் சுற்றுலா தொடர்பாக நகரத்தின் மேலதிக அபிவிருத்தியின் பயனுள்ள பொருளாதார செயற்பாடுகளுக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இணங்க உயர்ந்த வர்த்தக தேவைப்பாடு உள்ள தர்மவிஜய மாவத்தையினை நோக்கிய கூட்டுறவு காணியில் கலப்பு வர்த்தக அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயற்திட்டத்தின் மூலமாக பிரதான வீதி மற்றும் தர்மவிஜய மாவத்தை ஆகியவற்றினைச்சுற்றி தற:போதைய வர்த்தக நிலையங்களுக்கு

		வாகனத்தரிப்பு இடங்களை ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இக்காணியானது கூட்டுறவு காரியாலய வளாகம் உள்ளடங்கலாக காரியாலயங்கள் மற்றும் நிதி நீறுவனங்கள் ஆகியவற்றிற்கு இடவசதிகளை வழங்கும் விதமாக ஒரு பல மாடிகள் கொண்ட வர்த்தக தொகுதியாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். ஆகையினால் கட்டிடத்தில் தர்மவிஜய மாவத்தை மற்றும் நகர மத்தி ஆகியவற்றின் வழிகாட்டும் திட்டங்களுக்கு இணைவாக நிலத்தோற்றமிடுவதற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.
	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	வர்த்தக மற்றும் சுற்றுலா மேமபாட்டிற்கு அபிவிருத்தி குறைவாகக்காணப்படும் காணிகளின் பங்களிப்பினைப்பெற்றுக்கொள்ளல் நகர மத்தியின் உள்ளே வர்த்தக சேவைகளை விரிவாக்கல். நகர மத்தியின் உள்ளே காரியாலங்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல் நகரத்தினை அழகுபடுத்தல் மற்றும் நிலத்தோற்றமிடுதல் மேல் மாடிகளை திறந்த வெளிகளாக சுற்றுலாப்பயணிகளை கவரும் விதமாக அமைத்துக்கொள்ளுதல்
	செயற்திட்டத்தன் நன்மைகள்	• **வர்த்தக மையம்** • **காரியாலய வளாகம்** • **கவர்ச்சியான திறந்த வெளிகள்** • **வாகனத்தரிப்பிட வசதிகள்**
	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துலும் மற்றும் பராமரிப்பும்	கூட்டுறவு திணைக்களம் நகர அபிவிருத்தி அதிகாரசபை

ஏழு காணிகளின் அபிவிருத்தி செயற்திட்டம்

4. திறந்த வெளிகள் மற்றும் பொது வாகன தரிப்பிட அபிவிருத்தி செயற்திட்டம்

	செயற்திட்ட முன்மொழி	திறந்த பூங்கா மற்றும் பொது வாகன தரிப்பிடம் கொண்ட இடங்களின் அபிவிருத்தி
	அமைவிடம்	மாகாணம் / மாவட்டம் / பிரிவு / அமைவிடம ஊவா / பதுளை / பண்டாரவளை / நகர மையம் மாநகரசபை வர்த்தக தொகுதி
	அணுகுமுறை	பிரதான வீதி தர்ம விஜய வீதி


	அமைவிட படவரைவு	
	தற்போதைய பாவனை	இரண்டு மாடி வர்த்தக தொகுதி மாநகரசபை
	காணி உரிமையாளர்	பண்டாரவளை மாநகர சபை
	காணி விஸ்தீரணம்	45 பேர்ச்
	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளையானது பிரதான வீதி வழியாக ஒரு நீள்வடிவமான நகர்ப்புற கட்டமைப்பினைக்கொண்டுள்ள ஒரு நகரமாகும் நகரத்தின் உயர்ந்த அபிவிருத்தி உள்ளாற்றலின் விளைவாக தர்மவிஜய மாவத்தையும் ஒரு பிரதான வீதியாக அபிவிருத்தி அடைந்துள்ளது.. எனவே தற்போது மணிக்கூட்டுக்கோபுரத்தின் முன்பக்கத்தில் இருந்து சீவாலி மாவத்தை வரையிலான பகுதி முற்றாக அபிவிருத்தி அடைந்துள்ளது. ஆகையினால் தற்போது மாநகர சபை வர்த்தக தொகுதி அமைந்துள்ள பகுதியானது உயர்ந்நத போக்குவரத்து பகுதியாகக்காணப்படுகின்றது. அத்துடன் தற்போது காணப்படும் கட்டிடத்தில் சீர்திருத்த வேண்டிய தேவைப்பாடும் எழுந்துள்ளது. ஏறக்குறைய 40 அலகுகள் வரையில் மாநகர சபை வர்த்தக தொகுதியின் உள்ளே காலணி கடைகள் மூலிகை கடைகள் சத்தோச வர்த்தக நிறுவனம் புடவை கடைகள் பல சரக்கு கடைகள் போன்ற வெவ்வேறு வகையான வர்த்தக அலகுகள் அமைந்துள்ளன. நகர மத்தியில் உயர்ந்த சனத்தொகை ஈர்ப்பு காணப்படுவதனால் இவ்வர்த்தக தொகுதியின் உள்ளே வாகனத்தரிப்பிடங்கள் போதிய அளவில் காணப்படுவதனால் இவ்வர்த்தக தொகுதியின் உள்ளே வாகனத்தரிப்பிடங்கள் போதிய அளவில் காணப்படவில்லை. அத்துடன் ஒரு நபர் கொழும்பில் இருந்து நகரத்தினை நோக்கி வரும்போது நகரத்தின் வர்த்தக வீதிகளை பார்வையிடுவதுடன் மற்றும் அதே வேளையில் அதிகமானவர்கள் இந்த வர்த்தக தொகுதியின் காரணத்தினால் நகரத்தின் பிரதான வீதியினை பார்க்கும் சந்தர்ப்பத்தினை இழக்கின்றனர். இவ் உண்மைகளை நோக்குமிடத்து நகரத்தின் பிரதான வீதியின் உள்ளே வர்த்தக செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் மற்றும் நகரத்தினை அழகுபடுத்துவதனை மேம்படுத்துவதற்கும் பண்டாரவளை நகர அபிவிருத்தி திட்டத்தின் வாயிலாக இக்காணியின் உள்ளே ஒரு திறந்த வெளியினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்காணியின் இடவிளக்கவியலினை கருத்தில் கொண்டு நிலமட்டத்தில் ஒரு நிலத்தோற்றமிடப்பட்ட

		அபிவிருத்தியுடன் ஒரு திறந்த பூங்காவும் மற்றும் அடித்தள மட்டத்தில் வாகன தரிப்பிடத்திற்கான இடவசதியும்உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க இந்த தொகுதியில் அமைந்துள்ள தற்போதைய கடைகளும் கூட்டுறவு காணியி உள்ள உத்தேசிக்கப்பட்ட கலப்பு அபிவிருத்தி கட்டிடத்தில் அல்லது புகையிரத திணைக்கள சுற்றுலா ஊழியர் தங்கும் ஒற்றை மாடி கட்டிட காணியில் உத்தேசிக்கப்பட்டுள்ள கலப் அபிவிருத்தி செயற்திட்டத்திலும் இடமாற்றம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தின் உள்ளே ரோஜா தோட்டம் மற்றும் நிலத்தோற்றமிடுதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டியதுடன் மேலும் இத்தோட்டங்கள் வர்த்தக வேண்டும். இதன் வாயிலாக வெட்டப்பட்ட மலர்களின் தொகைக்கு இணங்க இக்காணியில் இருந்து நகரத்திற்கு வர்த்தக ரீதியாக பகிர்ந்து அளிக்கப்படும்போது அது ஒரு பங்களிப்பினை ஏற்படுத்திக்கொடுக்க முடிகின்றது. அத்துடன் நிழல் கொடுக்கும் மரங்கள் நாட்டப்பட வேண்டியதுடன் மற்றும் நகரத்திற்கு ஓய்வு எடுக்க வருகை தரும் பயணிகளுக்கு இருப்பிட வசதிகளும் வழங்கப்படுதல் வேண்டும்.
	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நகர மத்தியில் ஒரு திறந்த பசுமையான இடத்தினை உருவாக்குதல்** • **நகரத்தின் போக்குவரத்து நெரிசலை குறைத்தல்** • **நகரத்தின் அழகுபடுத்தலை அதிகரித்தல்** • **மலர்கள் தொடர்பான தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல்**
	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **நகரத்தின் நகர தோற்றமிடுதல் மற்றும் அழகுபடுத்தல் ஆகியனவற்றை பசுமையானதும்:.செழிப்பானதுமான திறந்த வெளிகளுடனும் அதிகரித்தல்** • **வாகன தரிப்பிடங்கள்**
	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	நகர அபிவிருத்தி அதிகாரசபை பண்டாரவளை மாநகர சபை

ஏழு காணிகளின் அபிவிருத்தி செயற்திட்டம்

5. கலப்பு அபிவிருத்தி செயற்திட்டம் வெலிமடை வீதி புகையிரத திணைக்கள ஊழியர் தங்கும் விடுதி


1.	செயற்திட்ட முன்மொழிவு	அபிவிருத்தி குறைவான காணிகளை அபிவிருத்திக்கு பயன்படுத்தலும் மற்றும் சுற்றுலா மற்றும் வர்த்க செயற்பாடுகளை மேம்படுத்தலும்.

2.	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>வேலிமடை வீதி</td></tr></table>
3.	அணுகுமுறை	வெலிமடை வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	புகையிரத திணைக்கள ஊழியர் தங்கும் விடுதி
6.	காணி உரிமை	புகையிரத திணைக்களம்
7.	காணி விஸ்தீரணம்	140 பேர்ச்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	இக்காணியானது ஏழு காணிகளின் அபிவிருத்தி எனப்படும் எண்ணக்கருவின் கீழ் அபிவிருத்தியடைவதுடன் அது அபிவிருத்தி குறைவான காணியின் பொருளாதாரரீதியில் பயனுள்ள அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். அதற:கு இணங்க தற்போது உள்ள ஊழியர் தங்கும் விடுதியானது செயற்திட்டம் இல.04 இனால் மாற்றப்பட்டு அது இக்கருப்பொருளின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும். அதற்கு இணங்க இக்காணி சுற்றுலாப்பயணிகளைக்கவரும் வகையில் திறந்த வெளிகளை வழங்குமுகமாகவும் மற்றும வர்த்தக அபிவிருத்தியினை மேம்படுத்தும் வகையிலும் ஒரு கலப்பு அபிவிருத்திக்கட்டிடமாக அபிவிருத்தி செய்யப்படும். இக்காணி ஒரு பல்மாடிகள் கொண்டுள்ள வர்த்தக தொகுதியாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்காணியின் இடவிளக்கவியலிற்கு இணங்க அது அடித்தளமும் அதன் மேலாக 5 மாடிகளைக்கொண்டதுமான ஒரு பல மாடிக்கட்டிடத்தினை அமைப்பதற்கு பொருத்தமானதாகும். அது புடவைகள் தயாரிக்ககப்பட்ட ஆடைகள் கடைகள் ஆபரணங்கள் வர்த்தக

		நிலையங்கள் உணவகங்கள் விடுதிகள் மற்றும் பொழுது போக்கு இடங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இக்காணிக்கு அருகில் அமைந்துள்ள உத்தேசிக்கப்பட்ட தற்போதைய மாவட்ட நீதிமன்ற தலத்தின் உள்ளே வாகன தரிப்பிட செயற்திட்டத்திற்கான அணுகுமுறையினை வழங்குவதற்கு இவ் அபிவிருத்தியானது பொருத்தமுடையதாக அமையும்.
9.	செயற்திட்ட நோக்கங்கள்	• **அபிவிருத்தி குறைவான காணியை பயனுள்ள அபிவிருத்திக்காக பயன்படுத்துதல்.** • **வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்துதல்** • **சுற்றுலாப்பயணிகளை கவரும் தன்மையினை அதிகரித்தல்.** • **வெலிமடை வீதியினை நோக்கி நகரத்தில் வர்த்தக செயற்பாடுகளை விரிவாக்கம் செய்தல்**
10	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **வர்த்தக தொகுதிகள்** • **ஓய்வு மற்றும் பொழுது போக்கிற்கான இடங்கள்.** • **வாகன தரிப்பிட வசதிகள்**
11	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	நகர அபிவிருத்தி அதிகாரசபை புகையிரத திணைக்களம் பண்டாரவளை மாநகர சபை

ஏழு காணிகளின் அபிவிருத்தி செயற்திட்டம்

6. ராதா கல்(சுயவாய புயட) அபிவிருத்தி செயற்திட்டம் - தற்போதைய மாவட்ட நீதிமன்ற தலம்


	செயற்திட்ட முன்மொழி	நகரத்தில் வாகன தரிப்பிடங்களை உருவாக்குதல்
	அமைவிடம்	மாகாணம்: ஊவா; மாவட்டம்: பதுளை; பிரிவு: பண்டாரவளை; அமைவிடம்: பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக தற்போதைய மாவட்ட நீதிமன்ற தலம்
	அணுகுமுறை	புண்டாரவளை – வெலிமடை வீதி அஸ்பலந்த வீதி
	அமைவிட படவரைவு	

	தற்போதைய பாவனை	மாவட்ட நீதி மன்றம்
	காணி உரிமையாளர்	நீதி அமைச்சு
	காணியின் விஸ்தீரணம்	40 பேர்ச்
	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளையானது நேர்வடிவில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு நகரமாகும் ஆகையினால் நகர மத்தியில் உயர்ந்த வர்த்தக தேவைப்பாடு காணப்படுவதுடன் மேலும் காணியின் உள்ளே வழங்கப்பட்ட வாகன தரிப்பிடத்திற்கான இடவசதி மிகக்குறைவானதாகும். ஆதற்கு இணங்க வீதிகளின் பக்கங்களில் வாகனத்தரிப்பிடங்களாக பயன்படுத்தப்படுவது வழமையாகி உள்ளது. இதன் விளைவாக அதிக போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது. வர்த்தக சவைகளுடன் பண்டாரவளை பிரதேச செயலக காரியாலயம் மற்றும் பொலிஸ் அலுவலகம் போன்றவற்றிற்கு வருகை தரும் மக்களும் பொதுவான வாகனங்களுக்கு போதிய அளவிலான சிரமத்திற்கு முகங்கொடுப்பதனையும் காணமுடிகின்றது. அத்துடன் பண்டாரவளை நகர அபிவிருத்தித்திட்டத்தில் நகர மத்தியின் செயற்பாடுகளுக்கு மாவட்ட நீதிமன்றம் அவசியமற்றது என்பதனால் அதனை வெலிமடை வீதி குற்றவியல் நடுவர் நீதின்ற பகுதியின் உள்ளே ஒரு நீதித்துறை தொகுதியாக முறைப்படி அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க வாகனத்தரிப்பிட வசதிகளை தற்போதைய மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் உள்ளே அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி இதனை பல்மாடிகள் கொண்ட கலப்பு அபிவிருத்தி செயற்திட்டமாக அபிவிருத்தி செய்தல் பொருத்தமானதாக இருக்கும் என்பதுடன் அதன் வலது பக்கத்தில் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. வாகனத்தரிப்பிடங்களை வெலிமடை வீதி மற்றும் அசிப்பலந்து வீதி ஆகிய இரு வீதிகளில் இருந்தும் அணுகமுடியும்.
	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நகர மத்தியில் உள்ள வீதி வழியாக தற்போது காணப்படும் வாகனத்தரிப்பிடங்களை குறைத்தல்.** • **நகர மத்தியில் தொழில்புரியும் இடங்கள் மற்றும் வர்த்தக சேவைகளுக்கு மக்களுக்கான சுலபமான அணுகுமுறையினை ஏற்படுத்திக்கொடுத்தல்.**
	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **வர்த்தக சேவைகளுக்கான சுலபமான அணுகுமுறை.** • **வாகன தரிப்பிடங்கள்.**
	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை

ஏழு காணிகளின் அபிவிருத்தி செயற்திட்டம்

7. பார்வைக்குரிய தளம் மற்றும் உணவக செயற்திட்டம்(பேரூந்து நிலையத்திற்கு முன்பாக)

1.	செயற்திட்டத்தின் முன்மொழி	பார்வைக்குரிய தளம் மற்றும் உணவக செயற்திட்டம்

2	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>பேரூந்து நிலையத்திற்கு முன்பாக</td></tr></table>
3.	அணுகுமுறை	ஹலிஎலா பிரதான வீதி(ரயடனைடய ஆயலை சுழயன)
4	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	வீதி ஒதுக்கீடு மற்றும் புகையிரத திணைக்களம் ஆகியவற்றிற்கு உரிமை வெற்றுக்காணி
6.	காணி உரிமை	புகையிரத திணைக்களம்
7	காணி விஸ்தீரணம்	
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	இச்செயற்திட்டமானது சுற்றுலாத்தொழிலை மேம்படுத்துவதற்கும் மற்றும் ஒரு பொருளாதார வளம் பெறும் இடமாக தியலத்தலாவையினை நோக்கி பண்டாரவளை நகர மத்தியில் இருந்து அழகான காட்சியினைப்பயன்படுத்துவதற்காகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது தியத்தலாவ நோக்கிய ஒரு பார்வையினை நகரமானது கொண்டிருந்த போதிலும் இவ்வளாகத்தின் மூலமாக எதுவித பொருளாதார நன்மையினையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தற்போதைய இந்தக்காணி நகர மத்தியில் அமைந்துள்ளதினால் பரபரப்பான நகர்ப்புற காட்சியுடன் மறு பக்கத்தில் உள்ள இயற்கையான காடசியின் அழகினை சுற்றுலாப்பயணிகள் கண்டு கழிப்பதற்கு இவ்வளாகம் உகந்ததாகக்காணப்படுகின்றது. இதன் மேல் மாடியினை ஒரு திறந்த வெளியாக பயன்படுத்துவதும் பொருத்தடையதாக இருக்கும்.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **காட்சி கொண்டுள்ள திறந்த வெளிகளை நகரத்தினை அழகுபடுத்துவதனை மேம்படுத்துவதற்காக பயன்படுத்துதல்.**

		• **சுற்றுலாப்பயணிகளுக்கு நகரத்தின் சல சலப்பினையும் மற்றும் இயற்கை சுற்றாடலின் அழகினை கண்டு கழிப்பதற்குமான ஒரு இடத்தினை அமைத்தும் கொடுத்தல்.**
10	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **அழகிய காட்சி கொண்ட இடங்களின் அபிவிருத்தி.** • **உணவு வழங்கும் வசதிகள்.**
11	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	புகையிரத திணைக்களம்.. பண்டாரவளை மாநகர சபை. வீதி அபிவிருத்தி அதிகாரசபை

8. நீதிமன்றத்தொகுதி அபிவிருத்தி செயற்திட்டம்

1.	செயற்திட்ட முன்மொழிவு	நீதிமன்ற தொகுதி செயற்திட்டத்தின் அபிவிருத்தி
2.	அமைவிடம்	மாகாணம் / மாவட்டம் / பிரிவு / அமைவிடம ஊவா / பதுளை / பண்டாரவளை / வேலிமடை வீதி தற்போதைய குற்றவியல் நடுவர் நீதிமன்ற காணி
3.	அணுகுமுறை	வெலிமடை வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	
6.	காணி உரிமையாளர்	நீதி அமைச்சு
7.	காணியின் விஸ்தீரணம்	50 பேர்ச்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளை 2023-2033 நகர அபிவிருத்தித்திட்டம் வாயிலாக நகரத்தினை ஒரு சுற்றுலாப்பயணிகளைக்கவரும் இடமாக மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க நகர மத்தியின் உள்ளே உயர்ந்த வர்த்தக பெறுமதி கொண்டுள்ளதும் அபிவிருத்தி குறைவானதாகவும் மற்றும் பொருத்தம் அற்ற பாவனை கொண்டுள்ளதுமான இடத்தினை மாற்றப்படுதலின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தினை தற்போதைய குற்றவியல் நடுவர் நீதிமன்ற காணியின் உள்ளே காணப்படும்

		நீதிமன்றத்தொகுதிக்கு இடமாற்றம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போதைய குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் தீர்ப்பாயம் ஆகியன அமைந்துள்ள காணியின் உள்ளே காணப்படும் நீதிமன்றத்தொகுதிக்கு மாவட்ட நீதிமன்றத்தினை இடமாற்றம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப குணாம்சங்கள் கொண்டுள்ளதும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டுள்ளதுமான ஒரு நீதிமன்றத்தொகுதி இக்காணியில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கஹற்றவெல(முயாயவவநறநடய) சந்திக்கு அருகில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட வர்த்தக தொகுதியில் மேல் மாடியானது சட்டத்தரணிகளின் காரியாலயத்திற்காக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் மேலும் அது சட்டத்தரணிகள் தமது சேவைகளை வழங்குவதற்கு சுலபமாகவும் அமையும்.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நகரத்தின் நீதித்துறை அமைப்பினை ஒரு வலயத்தின் உள்ளே ஒருங்கிணைத்தல்** • **பொதுமக்களுக்கும் மற்றும் சட்டத்தரணிகளுக்கும் சுலபமான அணுகுமுறையும் மற்றும் உட்கட்டமைப்பும் கொண்ட ஒரு வசதியான இடத்தினை அமைத்துக்கொடுத்தல்.** • **நீதித்துறை சார்ந்த செயற்பாடுகளை சலசலப்பான நகரத்தில் இருந்து அபபால் நடத்துவதற்கு ஒரு சுற்றாடலை ஏற்படுத்தல்.**
10	செயற்திட்டத்தின் நன்மைகள்	பொது மக்களுக்கு சுலபமான அணுகுமுறையினை உருவாக்குதல். சுட்டசேவைகளும் மற்றும் நீதித்துறை சார்ந்த சேவைகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு பகுதியினை உருவாக்குதல் நீதிமன்றத்தொகுதி உயர்ந்த உட்கட்டமைப்புக்கொண்ட சேவைப்பகுதி
11	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் பராமரித்தலும்	நீதி அமைச்சு

9. வர்த்தகத்தொகுதியும் மற்றும் சட்டத்தரணிகளின் வலயமும்

1.	செயற்திட்டத்தின் முன்மொழிவு	வர்த்தகத்தொகுதியும் மற்றும் சட்டத்தரணிகளின் காரியாலயமும்
2.	அமைவிடம்	மாகாணம் / மாவட்டம் / பிரிவு / அமைவிடம ஊவா / பதுளை / பண்டாரவளை / மயானம் முன்பாக கஹற்றேவெல சந்தி

3.	அணுகுமுறை	வெலிமடை வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	ஒழுங்குற்ற அங்கீகரிக்கப்பட்ட கடைகள்
6.	காணி உரிமையாளர்	பண்டாரவளை மாநகர சபை
7.	காணி விஸ்தீரணம்	20 பேர்ச்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளையில் நீதித்துறையுடன் தொடர்புபட்ட சட்ட சேவைகள் நகரத்தின் எல்லா இடத்திலும் சிதறிக்காணப்படுகின்றன. இதன் பிரதான உண்மையான காரணியாதெனில் சட்ட செவைகளை வழங்குவதற்கான தனியான இடம் காரியாலய வளாகத்தில் காணப்படாமை என்பதுடன் மற்றும் நீதித்துறை சேவைகள் இரண்டு இடங்களில் அமைந்துள்ளதுமாகும். பண்டாரவளை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் எல்லா நீதித்துறை சேவைகளையும் தற்போதுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்ற வெலிமடை வீதிக்காணியில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் சட்ட சேவைகளையும் அருகாமையில் ஒரு பொருத்தமான வளாகத்தில் வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் கஹற்றவெல சந்தியினைச்சூழ்ந்து உயர்ந்த அளவிலான வதிவிட சமூகம் காணப்படுவதனால் அதிகளவிலான நகர்புற வதவிடவாளர்கள் தமது நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நகரத்திற்கு செய்வதை விட கஹற்றவெல சந்திக்கு அருகிலேயே தமது தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கு ஆவலாக உள்ளனர். மேற்குறிப்பிட்ட கருத்துக்களை ஆய்வு செய்ததன் பின்னர் கஹற்றவெல சந்திக்கு அருகாமையில் ஒரு இரு மாடி வர்த்தகத்தொகுதியினை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்திற்காக வெலிமடை வீதியினை நோக்கிய மயானம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் இச்செயற்திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (தற்போது முறைசாரா கடைகள் அமைந்துள்ள பகுதி) இதன் வாயிலாக கஹற்றவெலவில் நீதித்துறை சேவைகளுடன் தொடர்புடைய ஒரு பகுதி உருவாக்கப்படும்.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நீதித்துறை சேவைகளுக்கு அருகே சட்ட சேவைகளையும் பெறக்கூடிய ஒரு வளாகத்தினை அமைத்தல்.** • **கஹற்றவெலவை சூழ்ந்து வர்த்தக சேவைகளை விரிவாக்கம் செய்தல்**

10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **வர்த்தகத்தொகுதி** • **சட்டத்தரணி விரிவாக்கம் செய்தல்**
11.	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை

10. பிரமாண்டமான பூங்காவின் அபிவிருத்தி – தொல்பொருள் காணி

1.	செயற்திட்டத்தின் முன்மொழி	பிரமாண்டமான தொல்பொருள் பாதுகாப்பு பகுதிகளின் அபிவிருத்தி
2.	அமைவிடம்	மாகாணம்: ஊவா; மாவட்டம்: பதுளை; பிரிவு: பண்டாரவளை; அமைவிடம்: அற்றம்பிற்றிய வீதி தொல்பொருள் பாதுகாப்பு காணி
3.	அணுகுமுறை	அற்றம்பிற்றிய வீதி வெலிமடை வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	தொல்பொருள் பாதுகாப்பு காணி
6.	காணியின் உரிமையாளர்	தொல்பொருள் திணைக்களம்
7.	காணி விஸ்தீரணம்	18 பேர்ச்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளை அபிவிருத்தித்திட்டம் 2023-2033 இன் கீழே ஓய்வு மற்றும் பொழுது போக்கு ஆகியவற்றிற்கான பகுதிகளை நகரத்தில் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தொல்பொருள் காணியில் சுற்றுலாப்பயணிகளை கவரும் நோக்கத்தினை அடைவதற்காகவும் மற்றும் சுற்றுவலாப்பயணிகளுக்கு தற்போது உள்ள தொல்லியல் மதிப்புகள் பற்றி கற்றுக்கொடுப்பதற்காகவும் ஒரு கேளிக்கை பூங்காவினை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட கேளிக்கை பூங்காவானது தொல்லியல் மதிப்புகளை

		அடிப்படையாகக்கொண்டதுடன் மற்றும் ஒரு பிரமண்டமான பூங்காவாகவும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். தற்போதைய தொல்பொருள் தலத்தில் அகழ்வு வேலைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அகழ்வின் வாயிலாக கண்டெடுக்கப்பட்டதும் மற்றும் அடையாளங்காணப்பட்டதுமான வரலாற்றிற்கு முன்பான இடிபாடுகள் தொடர்பான தகவல்கள் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். இக்காணியின் ஒரு வரையறுக்கப்பட்ட பகுதி மட்டும் இப்பிரமண்டமான பூங்காவிற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. அகழ்விற்கு உட்படாத பகுதிகளை பொது மக்கள் அணுகமுடியாத வகையில் பாதுகாப்புப்பகுதிகளாக வைத்திருக்க முடியும். அதற்கு இணங்க அற்றம்பிற்றிய வீதியில் இருந்து வெலிமடை வீதிவரையில் ஒரு நீண்ட நேர்வடிவம் கொண்ட பிரமாண்டமான பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **பண்டாரவளை தொல்லியல் மதிப:புகளினால் சுற்றுலா ஈர்ப்பினை மேம்படுத்தல்.** • **நகரத்தில் பொழுது போக்குத்திறந்த வெளிகளின் அபிவிருத்தி.** • **அற்றம்பிற்றிய வீதிக்கும் மற்றும் வெலிமடை வீதிக்கும் இடையில் ஒரு புதிய பாதையினை உருவாக்குதல்.**
10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **பிரமாண்டமான நீண்ட பூங்கா** • **பாதசாரிகளின் சுற்றிற்கு உகந்த பாதைகள்.**
11.	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	தொல்பொருள் திணைக்களம் பண்டாரவளை மாநகரசபை

11. மாற்று வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டம்

1.	செயற்திட்டத்தின் முன்மொழிவு	மாற்று வீதிகளின் அபிவிருத்தி

<table>
<tr><td>2.</td><td>அமைவிடம்</td><td>
<table>
<tr><th>மாகாணம்</th><th>மாவட்டம்</th><th>பிரிவு</th><th>அமைவிடம்</th></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>ராகுல் வித்தியால மாவத்தை</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>மாஹோல் பத்த கோயில் வீதி</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>அர்ச் தொமஸ் கொறடியவல வீதி</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>வட கபிலவெல பிந்துனுவேவா வீதி</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>வவெத்தென்ன - திகனதென்ன வீதி</td></tr>
</table>
</td></tr>
<tr><td>3.</td><td>அணுகுமுறை</td><td>அற்றமபிற்றிய வீதி வெலிமடை வீதி பதுளை வீதி</td></tr>
<tr><td>4.</td><td>அமைவிட படவரைவு</td><td> 
</td></tr>
<tr><td>5.</td><td>தற்போதைய பாவனை</td><td>வீதி</td></tr>
</table>


<table>
<tr><td>6.</td><td>காணி உரிமையாளர்</td><td>
<table>
<tr><th>வீதி</th><th>உரிமையாளர்</th></tr>
<tr><td>ராகுல் வித்தியால மாவத்தை</td><td>மாநகர சபை</td></tr>
<tr><td>மாஹோல்பத்த கோயில் வீதி</td><td>மாநகர சபை</td></tr>
<tr><td>அர்ச் தொமஸ் -கொறடியவல வீதி</td><td>மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை</td></tr>
<tr><td>வுட கபிலவெல பந்துனுவோ வீதி</td><td>மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை</td></tr>
<tr><td>வவேதெனா – திகனதேன வீதி</td><td>மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை</td></tr>
</table>
</td></tr>
<tr><td>7.</td><td>காணி விஸ்தீரணம்</td><td>
<table>
<tr><th>வீதி</th><th>தூர்ரம்</th></tr>
<tr><td>ராகுல் வித்தியாலய மாவத்தை</td><td>-</td></tr>
<tr><td>மாஹோல்பத்த கோயில் வீதி</td><td>500 கி.மீ</td></tr>
<tr><td>அர்ச் தொமஸ் - கொறடியாவெல வீதி</td><td>6.2 கி.மீ</td></tr>
<tr><td>வட கபிலவெலா பிந்துனுவேவா வீதி</td><td>2.9 கி.மீ</td></tr>
<tr><td>வவேதென்னா – திகனதென்னா வீதி</td><td>1 கி.மீ</td></tr>
</table>
</td></tr>
<tr><td>8.</td><td>செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்</td><td>ஒரு நேர்வடிவிலான நகர்புற கட்டமைப்பினைக்கொண்டுள்ள பண்டாரவளை நகரத்தினை 5 பிரதான வீதிகள் மூலம் அணுக முடியும். ஆனால் இவ்வீதிகளை தற்போதைய இடவிளக்கவியலின் விளைவாக மேலும் அகலப்படுத்த முடியாது உள்ளது. இதனால் நகரத்தின் ஊடாக செல்லாது மற்றய பகுதிகளை அடையக்கூடிய மாற்று வழிகளாக வேறு வீதிகளை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

அதற்கு இணங்க

(i) இணைப்பு – மகாயுல்பத்தான கோயில் வீதி – பூனகல வீதி – பண்டாரவளை வீதி
(ii) இணைப்பு – அர்ச் தொமஸ் கொறடிவல வெலிமடை வீதி – அற்றம் பிற்றிய வீதி
(iii)இணைப்பு வட கபிலவல – பிந்துனுவோ வீதி- அற்றம்பிற்றிய வீதி
(iv) இணைப்பு – வெவத்தெனா – திகானத்தேனா வீதி – வெலிமடை வீதி- அற்றம்பிற்றிய வீதி</td></tr>
<tr><td>9.</td><td>செயற்திட்டத்தின் நோக்கங்கள்</td><td>நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக்குறைத்தல்</td></tr>
<tr><td>10.</td><td>செயற்திட்டத்தின் நன்மைகள்</td><td>மாற்று வழிகளின் அபிவிருத்தி</td></tr>
<tr><td>11.</td><td>செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் பராமரித்தலும்</td><td>மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

பண்டாரவளை மாநகர சபை</td></tr>
</table>

12. நகர மையத்தின் மாற்று வழிகளின் அபிவிருத்தி

<table>
<tr><td>1.</td><td>செயற்திட்டத்தின் முன்மொழி</td><td>நகர மையத்தின் மாற்று வழிகளின் அபிவிருத்தி</td></tr>
<tr><td>2.</td><td>அமைவிடம்</td><td>
<table>
<tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>சிவாலி வீதி</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>சேனாயக்கா மாவத்தை</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>விஷாக்கா மாவத்தை</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>பிரைஸ் வீதி(சைஉநசுழயன)</td></tr>
</table>
</td></tr>
<tr><td>3.</td><td>அணுகுமுறை</td><td>அற்றம்பிற்றிய வீதி வெலிமடை வீதி பதுளை வீதி</td></tr>
<tr><td>4.</td><td>அமைவிட படவரைவு</td><td> 
</td></tr>
<tr><td>5.</td><td>தற்போதைய பாவனை</td><td>வீதி</td></tr>
</table>

<table>
<tr><td>6.</td><td>காணி உரிமையாளர்</td><td>
<table>
<tr><th>வீதி</th><th>உரிமையாளர்</th></tr>
<tr><td>சீவாலி வீதி</td><td>பண்டாரவளை மாநகர சபை</td></tr>
<tr><td>சேனனாயக்கா மாவத்தை</td><td>பண்டாரவளை மாநகர சபை</td></tr>
<tr><td>விஷாக்கா மாவத்தை</td><td>பண்டாரவளை மாநகர சபை</td></tr>
<tr><td>பிறைஸ் வீதி</td><td>பண்டாரவளை மாநகர சபை</td></tr>
</table>
</td></tr>
<tr><td>7.</td><td>காணியின் விஸ்தீரணம்</td><td>
<table>
<tr><td>வீதி</td><td>தூரம்</td></tr>
<tr><td>சீவாலி வீதி</td><td>350 மீ</td></tr>
<tr><td>சேனனாயகி மாவத்தை</td><td>2.2 கி.மீ</td></tr>
<tr><td>விஷாக்கா மாவத்தை</td><td>500 மீ</td></tr>
<tr><td>பிறைஸ் வீதி</td><td>250 மீ</td></tr>
</table>
</td></tr>
<tr><td>8.</td><td>செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்</td><td>பண்டாரவளை நகரத்தில் உள்ள பேக்குவரத்து நெரிசலுக்கான பிரதான காரணம்யாதெனில் பிரதான வீதிகள் வழியே அதிக அளவில் பொது மக்களைக்கவரும் சேவை வழங்கும் இடங்கள் அமைந்துள்ளமையும் மற்றும் மாற்று வழிகள் பிரபலம் பெற்றவையாகக்காணப்படாமையும் ஆகும். அதற்கு இணங்க நகரத்தின் சுலபமான செயற்பாடுகளுக்கு பிரதான வீதிகள் வழியே தற்போது காணப்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கவேண்டியது அவசியமாகும். இதனால் நகர மத்தியில் பிரதான வீதிகளுடன் இணைக்கும் மாற்றுப்பாதைகளை அபிவிருத்தி செய்வது நோக்கமாக உள்ளதுடன் மேலும் சுலபமான பொதுமக்கள் அணுகுமுறையினை ஏற்படுத்துதலும் ஆகும். இங்கு இவ்வீதிகள் பாதசாரிகள் பாதைகளுடன் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.</td></tr>
<tr><td>9.</td><td>செயற்திட்டத்தின் நோக்கங்கள்</td><td>நகரத்தின் உள்ளே சுலபமான போக்குவரத்து வலை அமைப்பினை ஏற்படுத்துதலும்</td></tr>
<tr><td>10.</td><td>செயற்திட்டத்தின் நன்மைகள்</td><td>மாற்று வழிகளை அபிவிருத்தி செய்தல்</td></tr>
<tr><td>11.</td><td>செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்</td><td>பண்டாரவளை மாநகர சபை</td></tr>
</table>

13. பாதசாரிகள் பாலத்தின் அபிவிருத்தி

1	செயற்திட்ட முன்மொழி	நகர மத்தியில் பாதுகாப்பான பாதசாரிகளின் சுழற்சி
2	அமைவிடம்	

		<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரளை</td><td>அர்ச் ஜோசப் கல்லூரி முன்பாக</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>தன்திரியா</td></tr></table>
3	அணுகுமுறை	ஆற்றம்பிற்றிய வீதி வெலிமடை வீதி பதுளை வீதி
4	அமைவிட படவரைவு	
5	தற்போதைய பாவனை	வீதி
6	காணியின் உரிமையாளர்	வீதி அபிவிருத்தி அதிகாரசபை
7	காணியின் விஸ்தீரணம்	
8	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளையானது பிரதான வீதிகளாகிய பண்டாரவளை பதுளை கொழும்பு வீதிகள் வழியே நேர் வடிவிலான ஒரு நகரம் என்பதுடன் இவ்வீதிகள் வழியாக உயர்ந்த போக்குவரத்து சுழற்சியினைக்காணமுடிகின்றது. கல்வித்துறையானது மூன்றாம் பொருளாதார இயக்கியாகக்காணப்படுவதனர் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் நகரத்திற்கு நாளாந்தம் வருகை தருகின்றனர். ஆகையினால் நகரத்தில் பாதசாரிகளின் சுழற்சியினை பாதுகாப்பது அவசியமாகின்றது. அதற்கு இணங்க அர்ச் ஜோசப் கல்லூரி முன்பாகவும் மற்றும்தந்திரிய சந்தியிலும் உயர்ந்த பாதசாரிகள் சுழற்சியுடனான பாதசாரிகள் பாலம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. • **இவ் அபிவிருத்தியின் மூலமாக பேரக ஹலிஎலா பிரதான வீதியின் வலது மற்றும் இடது பக்கங்களை அர்ச ஜோசப் கல்லூரியின் முன்பாக இணைப்பதற்கு**

		எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது உள் வர்த்தக கட்டிடத்தின் வர்த்ததக செயற்பாடுகளை வலது பக்கத்தில் அந்த கட்டிடத்திற்கு பாலத்தின் மூலமாக அணுகுமுறையினை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலமாக மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. • **தந்திரியா சந்தி பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம்(டீயனெயசயறநடய ஊநவெசயட ஊழடடநபந) இல் இருந்து வரும் வீலோயா வீதி(ர்நநடழலய சுழயன) வலிஎலா – பேரகல பிரதான வீதியின் வலது பக்கத்தில் அதன் செங்குத்தான இடவிளக்கவியலைப்பயன்படுத்துவதன் மூலமாக சுலபமான பாதசாரிகளின் சுழற்சியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.**
9	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	நுகரத்தில் பாதசாரிகளின் சுழற்சியினை பாதுகாப்பாகவும் மற்றும் ஒழுங்கான முறையிலும் கையாள்வதற்கு வேண்டிய அவசிய உட்கட்டமைப்பின் அபிவிருத்தி.
1	செயற்திட்டத்தின் நன்மைகள்	பாதசாரிகள் பாலம் வர்த்தக செயல்பாடுகளின் மேம்பபாடு
1	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதம் மற்றும் பராமரிப்பும்	பண்டாரவளை மாநகர சபை வீதி அபிவிருத்தி அதிகாரசபை

14 பசுமையான பாதசாரிகள் பாதைகளின் அபிவிருத்தி

	செயற்திட்டத்தின் முன்மொழிவு	பசுமையான பாதசாரிகள் பாதைகளின் அபிவிருத்தி
	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>சிப்பிற்கோ பெற்றோல் நிலையத்தில் இருந்து தந்திரிய சந்தி வரையிலான பதுளை வீதி</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>புண்டாரவளை மாவட்ட வைத்தியசாலை வரையிலான வெலிமடை வீதி</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>தோல்லியல் காணி வாயிலாக அற்றம்பிற்றிய வீதியில் இருந்து வெலிமடை வீதி</td></tr></table>
	அணுகுமுறை	ஆற்றம்பிற்றிய வீதி வெலிமடை வீதி பதுளை வீதி

<table>
<tr><td></td><td>அமைவிட படவரைவு</td><td>  </td></tr>
<tr><td></td><td>தற்போதைய பாவனை</td><td>வீதி</td></tr>
<tr><td></td><td>காணியின் உரிமையாளர்</td><td>
<table>
<tr><th>அமைவிடம்</th><th>உரிமையாளர்</th></tr>
<tr><td>பதுளை வீதி – சிப்பெற்வோ பெற்றோல் நிலையத்தில் இருந்து தந்திரியா சந்தி</td><td>வீதி அபிவிருத்தி அதிகார சபை</td></tr>
<tr><td>வேலிமடை வீதி – பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலை வரை</td><td>வீதி அபிவிருத்தி அதிகார சபை</td></tr>
<tr><td>தோல்லியல் காணி வாயிலாக அற்றம்பிற்றயா வீதி – வெலிமடை வரையில்</td><td>தொல்பொருள் திணைக்களம்</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>காணி விஸ்தீரணம்</td><td></td></tr>
<tr><td></td><td>செயற்திட்டத்தினை நியாயப்படுத்துதல்</td><td>பண்டாரவளை அபிவிருத்தி திட்டம் 2023-2033 இன் கீழே நகரத்தில் ஒரு பாதசாரிகள் நட்புக்கொண்ட சுற்றாடலை உண்டாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க நகரத்தில் சனத்தொகை செறிவு உள்ள இடங்களுக்கு இணைக்கும் பாதசாரிகள் வழிகளை அபிவிருத்தி செய்வதற:கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க இப்பாதசாரிகளின் வழிகளாக அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொற்றில பிறஷ்(டீழவவடந டிசரளா) கபோ லீலா(முயடிழ டுநநடய) பர்ச்(குரஉா) ஜக்கரண்டா(துயஉயசயனெய) போன்ற தாவரங்களை இப்பாதசாரிகள் வழியே நாட்டுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்தாவரங்கள் கொங்கிறீற் சிலிண்டர்களில்(ஊழஉெசநவந உலடனைநெச) நாட்டப்ப்டுவதுடன் மேலும் அவந்நின் வேர்கள் வீதிகளின் மேற்பரப்பில் பரவுவதனை குறைத்துக்கொள்ளும் வகையில் வீருத்தி செய்யப்படுதல் வேண்டும்</td></tr>
<tr><td></td><td>செயற்திட்டத்தின் நோக்கங்கள்</td><td>• நகர மத்தியில் பாதசாரிகளின் சுழற்சியினை அதிகரித்தல்
• நகரத்தின் பசுமையான சுற்றுலா கவாச்சியினை அதிகரித்தல்</td></tr>
<tr><td></td><td>செயற்திட்டத்தின் நன்மைகள்</td><td>பசுமையான பாதசாரிகளின் வழிகள்</td></tr>
</table>

	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை வீதி அபிவிருத்தி அதிகார சபை

15. பாதசாரிகளினது நிலக்கீழான கடவையின் அபிவிருத்தி

	செயற்திட்டத்தன் முன்மொழிவு	பாதசரிகளினது நிலக்கீழான கடவையின் அபிவிருத்தி
	அமைவிடம்	மாகாணம் / மாவட்டம் / பிரிவு / அமைவிடம: ஊவா / பதுளை / பண்டாரவளை / பிரதான சந்தி ஊவா / பதுளை / பண்டாரவளை / ஆறலிய ஸ்ரோஸ்(யுசயடலைய ளுவழசநள) அருகே தர்மவிஜய மாவத்தை
	அணுகுமுறை	வெலிமடை வீதி பதுளை வீதி தர்மவிஜய மாவத்தை
	அமைவிட படவரைவு	
	தற்போதைய பாவனை	வீதி
	காணியின் உரிமையாளர்	அமைவிடம் / உரிமையாளர்: பிரதான சந்தி / வீதி அபிவிருத்தி அதிகார சபை அறலிய ஸ்ரோர்ஸ் அருகே தர்ம விஜய மாவத்தை / வீதி அபிவிருத்தி அதிகார சபை
	காணியின் விஸ்தீரணம்	
	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	ஒரு நேர் வடிவம் கொண்ட நகர்புற கட்டமைப்பினைக்கொண்டுள்ள நகரமானது போக்குவரத்து வலை அமைப்பு சுலபமாக இயங்க வைப்பதன் மூலமாக பேக்குவரத்து நெரிசலை குறைத்துக்கொள்ள

		முடியும். வீதியின் மேற்பரப்பில் பாதசாரிகளின் கடவைகளின் செயற்பாட்டினால் இடை இடையே போக்குவரத்தின நிறுத்தி வைத்தலாகும். இதற்கு இணங்க பண்டாரவளை நகரத்தில் உயர்ந்த வாகனச்சுழற்சி மற்றும் உயர்ந்த பாதசாரிகள் சுழற்சி கொண்டுள்ள இடங்களில் நிலக்கீழான பாதசாரிகள் கடவைகளை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
		பிரதான சந்தி –பண்டாரவளையின் பிரதான சந்தியானது மூன்று பிரதான விதிகளை இணைக்கும் ஒரு சந்தியாகும். கொழும்பில் இருந்து பதுளை அல்லது அற்றம்பிற்றிய வெலிமடை வீதி நோக்கி வரும் வாகனங்களுக்கு மாற்று வழிகள் இல்லாததன் காரணத்தினால் அந்த திசைகளில் பயணிக்கும் வாகனங்கள் பிரதான சந்திகளைத்தாண்டிச்செல்லுதல் கட்டாயமாகும். ஆகையினால் சந்தி வழியே பாதசாரிகளின் சுழற்சிக்கு 3 பாதசாரிகளின் கடவைகள் காணப்படுவதுடன் மேலும் ஒவ்வொரு வாகனமும் இரண்டு கடவைகளை கடந்து செல்லுதல் வேண்டும். ஆகையினால் பாதசாரிகள் கடவைகள் மூலமாக பாதசாரிகள் சுழற்சியினால் ஏற்படும் போக்குவத்து நெரிசலைக்குறைக்குமுகமாக பிரதான சந்திகளில் நிலத்தின் கீழான பாதசாரிகள் கடவைகளை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம் முன்மொழிவின் வாயிலாக ரொறிங்கன் கட்டிடத்தின் முன்பாகவும் தற்போது உள்ள சந்தானி விடுதி முன்பாகவும் மற்றும் சிங்கிரி கட்டிடத்தின் முன்பாகவும் 3 நிலக்கீழ் பாதசாரிகளின் நுழைவாயில்கள் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் வீதியின் உள்ளே வர்த்தக இடங்கள் கொண்டுள்ள ஒரு நிலக்கீழ் சுரங்கப்பாதையும் காணப்படுவதுடன் இவ் வர்த்தக இடங்களுக:கு ஆபரணக்கடைகள் மிகவும் பொருத்தமுடையதாகும். **அரலிய ஸ்ரோர்ஸ் அருகே உள்ள தர்ம விஜய மாவத்தை** தர்ம விஜய மாவத்தையானது அரலிய ஸ்ரோஸ் அருகே உயர்ந்த பாதசாரிகளின் சுழற்சியினைக்கொண்ட ஒரு பாதசாரி பரிமாற்றத்தினைக்கொண்டுள்ளது. இப்பாதசாரிகளின் கடவை உள்ள இடமானது ஒரு செங்குத்துச்சரிவு கொண்ட இடத்தில் அமைந்துள்ளதுடன் மேலும் பதுளை நோக்கி பயணிக்கும் வாகனங்கள் இப்பாதசாரிகளின் கடவையின் விளைவாக சடுதியாக வாகனத்தை நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. தற்பாது காணப்படும் இடவிளக்கவியல் மற்றும் உயர்ந்த பாதசாரிகளின் சுற்றினை ஒப்பிடும் போது பாதசாரிகளினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்து முகமாக ஒரு நிலக்கிழான பாதசாரிகளின் கடவையானது பொருத்தமுடையதாக அமையும். அத்துடன் உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித்திட்டத்தின் 7 காணிகளின் அபிவிருத்தி எனும் எண்ணக்கருவிற்கு இணங்க இவ் வீதியின் வழியே காணப்படும் புகையிரத திணைக்களத்திற்கு உரிய காணியானது உயரிய அபிவிருத்திக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதனால் அதற்கு இணங்க எதிர்காலத்தில் தற்போது உள்ள பாதசாரிகளின் சுழற்சியானது மேலும் உயர்வடையும்.

	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் ஆகியோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.** • **வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்து ஆகியவற்றிற்கான சீரான அசைவிற்கு ஏற்ற சுற்றாடலை உருவாக்குதல்.**
	செயற்திட்டத்தின் நன்மைகள்	நிலக்கீழான பாதசாரிகளின் கடவை
	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலுமம் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை வீதி அபிவிருத்தி அதிகார சபை

16. நடுத்தர வருமான வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம்

1.	செயற்திட்ட முன்மொழிவு	மாநகர எல்லைக்குள் நடுத்தர வருமான வீடமைப்பு அபிவிருத்தி
2.	அமைவிடம்	

மாகாணம்	மாவட்டம்	பிரிவு	அமைவிடம்
ஊவா	பதுளை	பண்டாரவளை	மாநகர சபை ஊழியர் தற்கும் விடுதி உள்ள காணி பூநகலை வீதி
ஊவா	பதுளை	பண்டாரவளை	சபானி பில்லே காணி –பூனகல வீதி
ஊவா	பதுளை	பண்டாரவளை	தொல்லியல் காணிக்கு அருகே உள்ள நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான காணி
ஊவா	பதுளை	பண்டாரவளை	குடா குசும் பாலிக வித்தியாலயம் அருகே உள்ள மாநகர சபை காணி

3.	அமைவிடம்	அமைவிடம்	அணுகுமுறை
		மாநகரசபை தொழிலாளர் விடுதிக்கு அருகே உள்ள காணி பூனகலை வீதி	பூனகலை வீதி
		சாபனி பில்லே காணி பூனகல வீதி	பூனகலை வீதி
		தொல்லியல் காணிக்கு அருகில் உள்ள நீர்ப்பாசனதிணைக்களத்திற்கு சொந்தமான காணி	அற்றம்பிற்றிய வீதி

		குடா குசும் பாலிக்கா வித்தியாலயம் அருகில் உள்ள மாநகரசபை காணி சேனனாயக்கா மாவத்தை
4.	அமைவிட படவரை	
5.	தற்போதைய பாவனை	

அமைவிடம்	பாவனை
மாநகர சபை தொழிலாளர் தங்கும் விடுதி அருகே உள்ள காணி பூனகல வீதி	வெற்றுக்காணி
சப்பானி பில்லே காணி – பூனகலை வீதி	வெற்றுக்காணி
தோல்லியல் காணிக்கு அருகே உள்ள நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு சொந்தமான காணி	வெற்றுக்காணி
குடா குசும் பாலிக்கா வித்தியாலயம் அருகில் உள்ள மாநகர சபை காணி	வெற்றுக்காணி

6.	காணி உரிமையாளர்	அமைவிடம்	உரிமையாளர்
		முாநகர சபை தொழிலாளர் தங்கும் விடுதி அருகே உள்ள காணி பூநகலை வீதி	பண்டாரவளை மாநகர சபை
		சுப்பானி பில்லே காணி- பூனகலை வீதி	பண்டாரவளை மாநகர சபை
		தொல்லியல் காணிக்கு அருகே உள்ள நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு சொந்தமான காணி	நீர்ப்பாசனத்திணைக்களம்
		குடாகுசும் பாலிக்கா வித்தியாலயம் அருகில் உள்ள மாநகர சபை காணி	பண்டாரவளை மாநகர சபை
7.	காணி விஸ்தீரணம்		
		அமைவிடம்	விஸ்தீரணம்
		மாநகர சபை தொழிலாளர் விடுதிக்கு அருகே உள்ள காணி பூனகலை வீதி	04 ஏக்கர்
		சப்பானி பில்லே காணி – பூனகலை வீதி	13 ஏக்கர்
		தோல்லியல் காணிக்கு அருகில் உள்ள நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு சொந்தமான காணி	06 ஏக்கர்
		குடாகுசும் பாலிக்கா வித்தியாலயம் அருகில் உள்ள மாநகரசபை காணி	1 ஏக்கர் 3 றூட் 32.08 பேர்ச்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	அதிக அளவிலான மக்கள் தமது வதிவிடத்தினை உயர்ந்த அபிவிருத்தி கொண்டுள்ளதும் மற்றும் பிரபலமடைந்துள்ளதுமான பண்டாரவளை நகரத்தில் அதன் வர்த்தக மற்றும் கல்வித்துறைகளினால் ஸ்தாபித்துக்கொள்வதற்கு விரும்புகின்றனர். பண்டாரவளையானது 1.24மூ சனத்தொகை வளர்ச்சியினையும் மற்றும் சனத்தொகை அடர்த்தியாக ஹெக்ராயருக்கு 38 இனையும் கொண்டுள்ளது. அத்துடன் அளவு 4 ஆகவும் மேலும் நகரத்தில் சராசரியாக ஒரு குடும்பத்தின் அளவு 4 ஆகவும் மேலும் நகரத்தில் தனிக்குடும்பங்களுக்கு அதிக அளவிலான இடம் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. தற்போது உள்ள வீடுகளையும் மற்றும் சனத்தொகையினையும் ஒப்பிடும் போது 800 அளவிலான வீடுகள் குறைவாக உள்ளது. அத்துடன் நகரத்தில் காணப்படும் வர்த்தக கல்வி மற்றும் நிர்வாக சேவைகளின் விளைவாக ஒரு உயர்ந்த வதிவிட தேவைப்பாடு காணப்படுகின்றது. இவ் உண்மைகளை	

		கருத்தில் கொண்டு நகரத்தின் உள்ளே நடுத்தர வருமான வீடுகளுக்கு ஒரு உயர்ந்த தேவைப்பாடு காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. அதற்கு இணங்க பண்டாரவளை நகரத்தில் நான்கு அமைவிடங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அவை நடுத்தர வருமானம் கொண்ட விடமைப்புத்திட்டமாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
9.	செயற்திட்ட நோக்கங்கள்	தற்போது உள்ள உயர்ந்த வதிவிட தேவைப்பாடுகளுக்கு வீடமைப்பினை வழங்குதல்
10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	நடுத்தர வருமான வீடமைப்பு
11.	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை

17. நகர மத்தியில் சந்து வழிகளின் அபிவிருத்தி செயற்திட்டம்

<table>
<tr><td></td><td>செயற்திட்டத்தின் முன்மொழி</td><td colspan="4">சுந்து வழிகளின் அபிவிருத்தி</td></tr>
<tr><td></td><td>அமைவிடம்</td><td colspan="4"><table>
<tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>னுகுஊஊ வங்கி அருகில்</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>ஆறலிய ஸ்ரோஸ் அருகில் தர்மவிஜய மாவத்தை</td></tr>
<tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>பராஷக்தி கடைக்கு அருகே சேனனாயக்கா மாவத்தை முதல் பிரதான வீதி வரை</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அணுகுமுறை</td><td colspan="4">பிரதான வீதி மற்றும் தர்மவிஜய மாவத்தை</td></tr>
</table>

	அமைவிட படவரைவு	
	தற்போதைய பாவனை	பாதசாரிகளின் சுழற்சிக்குப்பயன்படுத்தப்படும் சந்து வழிகள்
	காணி உரிமையாளர்	பண்டாரவளை மாநகர சபை
	காணியின் விஸ்தீரணம்	<table><tr><td>அமைவிடம்</td><td>ஒழுங்கையின் நீளம்</td></tr><tr><td>னுகுஉஊஉ வங்கி அருகில்</td><td>60 மீற்றர்</td></tr><tr><td>அறலிய ஸ்ரோஸ் அருகே தர்ம விஜய மாவத்தை</td><td>25 மீ</td></tr><tr><td>பராஷக்தி கடையின் அருகே சேனநாயக்கா மாவத்தையில் இருந்து பிரதான வீதி வரை</td><td>175 மீ</td></tr></table>
	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளை நகரமானது பிரதான வீதி வழியே முதன்மையாக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் மற்றும் தர்ம விஜய மாவத்தை அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் அது இவ் வீதி வழியாக போக்குவரத்தினை குறைப்பதற்கான மாற்று வழியாகப்பயன்படுத்தப்பட்டது. ஆனால் அபிவிருத்தி செயற்பாடுகளின் மேம்பாட்டுடன் தர்ம விஜய மாவத்தையில் உயர்ந்த வர்த்தக தேவைப்பாடு காணப்பட்டது. அதற்கு இணங்க நகரத்தில் நெருப்புக்குழிகள் ஆக(குசைந ிவைள) பயன்படுத்தப்பட்ட இடங்கள் பாதசாரிகள் சுழற்சிக்கான பாதைகளாக பயன்படுத்தப்பட்டன. இது இரு வீதிகளுக்கும் இடையே ஒரு சிறந்த இணைப்பாக அமைந்ததுடன் மற்றும் பாதசாரிகளுக்கு சுலபமான அணுகுமுறையினையும் ஏற்படுத்திக்கொடுத்தது. இல்லாவிட்டால் பாதசாரிகள் 700-800 மீற்றர் துர்ரம் வரையில் தேவையற்ற பயணம் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கும். அதற்கு இணங்க இதற்கு என

		அடையாளங்காணப்பட்ட 3 அமைவிடங்களில் சந்து வழிகளின் அபிவிருத்தி அத்தியாவசியமானது என பண்டாரவளை அபிவிருத்தித்திட்டம் 2023-2033 இனால் அங்கீகரிக்கப்பட்டது. இவ் விடயமாக இப்பாதைகள் வழியாக தற்போது காணப்படும் சட்ட விரோதமான வணிக செயற்பாடுகளை அகற்றுதல் முதலில் செய்யப்படுதல் வேண்டும். பாதைகள் 10 மீற்றர் இடைவெளிகளில் வீதி விளக்குகளினால் ஒளியேற்றப்படுதல் வேண்டும். செங்குத்தான அணுகுவழி வீதிகளில் படிகள் மூலமாக அணுகுமுறை அமைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் றிலத்தோற்றமிடுதலானது பாதசாரிகளின் சுழற்சிக்கு வேண்டிய இடவசதியுடன் சிரமம் ஏற்படுத்தாத முறையில் நடாத்தப்படல் வேண்டும்.
	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நகரத்தின் உள்ளே பாதசாரிகளின் சுழற்சிக்கு வசதிகளை வழங்குதல்.** • **நகரத்தின் அழகுபடுத்தலை அதிகரித்தல்.**
	செயற்திட்டத்தின் நன்மைகள்	ஒழுங்கைகளில் அபிவிருத்தி நகர அழகுபடுத்தல்
	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகரசபை

18. தற்போதைய குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் முன்பாக பார்வைக்கான தளம்

1.	செயற்திட்ட முன்மொழி	பார்வைக்கான தளம் மற்றும் உணவக செயற்திட்டம்
2.	அமைவிடம்	<table><tr><th>மாகாணம்</th><th>மாவட்டம்</th><th>பிரிவு</th><th>அமைவிடம்</th></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>தற்போதைய குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இட ஒதுக்கீடு</td></tr></table>
3.	அணுகுமுறை	வெலிமடை – பண்டாரவளை பிரதான வீதி


4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	வீதி ஒதுக்கீடு
6.	காணி உரிமையாளர்	வீதி அபிவிருத்தி அதிகார சபை
7.	காணி விஸ்தீரணம்	3 பேர்ச்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளை நகரமானது தனித்துவமான இடவிளக்கவியல் குணாம்சங்களுடன் சுற்றாடலின் அழகினை வெளிப்படுத்தும் அழகிய காட்சி கொண்ட இடுக்கு வழிகளைக்கொண்டுள்ளது. ஆகையினால் இவ் இடங்கள் சேவைகளை வழங்க வரும் மக்களுக்கு கவர்ச்சியான ஓய்வெடுக்கும் இடங்களாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பதுடன் சுற்றுலாப்பயணிகளின் கவரும் தன்மையினையும் மேம்படுத்தக்கூடியதாக இருக்கும். பண்டாரவளை நகர அபிவிருத்தி திட்டம்- 2023-2033 இற்கு இணங்க எல்லா நீதித்துறை வேலைகளையும் வெலிமடை வீதியினை நோக்கி இடம்மாற்றம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் கீழே வெலிமடை பண்டாரவளை பிரதான வீதி வழியாக உத்தேசிக்கப்பட்ட நீதிமன்ற வளாக ஒதுக்கீட்டிற்கு முன்பாக நீதிமன்ற சேவைகளுக்காக வருகை தரும் மக்களுக்கு ஒரு ஓய்வு எடுக்கும் இடமாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகரத்தில் சட்டசேவைகள் வழங்கும் சட்டத்தரணிகளுக்கு ஒரு காரியாலய வளாகமும் கஹற்றவெல சந்திக்கு அருகே உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க இவ் இடத்தின் இயற்கை அழகினை பயன்படுத்தி இச்சேவைகளுக்காக வருகை தரும் மக்களுக்கு ஒரு ஓய்வெடுக்கும் பொது இடமாக அமைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் ஒரு சிறிய உணவகமும் இச்செயற்திட்டத்துடன் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நீதித்துறை சேவைகளுக்காக வருகை தரும் பொது மக்களுக்கு தேவைப்படும் பொதுவான ஓய்வெடுக்கும் பகுதிகளின் அபிவிருத்தி** • **சுற்றாடல் ரீதியிலான அழகினை மேம்படுத்தல்.**
10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	• **பொதுவான ஓய்வெடுக்கும் பகுதி** • **சிறிய உணவகம்**
11.	செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை வீதி அபிவிருத்தி அதிகார சபை

19. வீதி அபிவிருத்தி மற்றும் நிலத்தோற்றமிடல்

1.	செயற்திட்ட முன்மொழிவு	நகரத்தில் சந்திகளின் அபிவிருத்தி
2.	அமைவிடம்	
3.	அணுகுமுறை	

மாகாணம்	மாவட்டம்	பிரிவு	அமைவிடம்
ஊவா	பதுளை	பண்டாரவளை	பிரதான சந்திகள்
ஊவா	பதுளை	பண்டாரவளை	ரெலிகொம் (வுநடநஉழஅ) நிறுவனத்திற்க முன்பாக
ஊவா	பதுளை	பண்டாரவளை	கஹற்றவெல சந்தி
ஊவா	பதுளை	பண்டாரவளை	அற்றம்பிற்றிய வீதி 3 மைல் வீதி
ஊவா	பதுளை	பண்டாரவளை	பதுளை வீதி 3 மைல் வீதி
ஊவா	பதுளை	பண்டாரவளை	பிந்துனுவேவா சந்தி
ஊவா	பதுளை	பண்டாரவளை	தந்திரிய சந்தி

4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	சுந்திகள்
6.	காணி உரிமையாளர்	வீதி அபிவிருத்தி அதிகாரசபை
7.	காணியின் விஸ்தீரணம்	
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	மேலே அடையாளங்காணப்பட்டுள்ள சந்திகள் நகரத்தில் தற்போது உள்ள சந்திகள் ஆகும். மற்றும் இச் சந்திகள் நகரத்தின் அழகுபடுத்தலை மேம்படுத்துவதற்காக நிலத்தோற்றம் இடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டானது நகரத்தின் அணுகுமுறைகளை அழகுபடுத்தலை நோக்கமாகக்கொண்டுள்ளது. இப்பேற்பட்ட நிலத்தோற்றமிடும் வேலைகளுக்கு ரோஜா மர நடுகைக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	நகரத்தின் அழகுபடுத்தலை அதிகரித்தல்
10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	சந்திகளுக்கு நிலத்தோற்றமிடுதல்
11.	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரிப்பும்	பண்டாரவளை மாநகர சபை


20. பேரூந்து நிலையத்திற்கு முன்பாக வீதி விரிவாக்கத்திற்கான வீதி அபிவிருத்தி செயற்திட்டம்

1.	செயற்திட்ட முன்மொழி	வீதி விரிவாக்கம்

2.	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>பேரூந்து நிலையத்திற்கு முன்பாக</td></tr></table>
3.	அணுகுமுறை	பேறகல - ஹலிஎலா பிரதான வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	வீதி ஒதுக்கீடு மற்றும் நடைபாதை
6.	காணி உரிமையாளர்	வீதி அபிவிருத்தி அதிகாரசபை
7.	காணியின் விஸ்தீரணம்	130 மீற்றர் தூரம் - பேரூந்து நிலையத்திற்கு முன்பாக
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	பண்டாரவளையானது நேர் வடிவத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு நகரம் இதற்கு தற்போது உள்ள இடவிளக்கவியல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நகரத்தின் வீதி அமைப்பு ஐந்து பிரதான திசைகளில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கடினமான இடவிளக்கவியல் நிலைமைகளின் மத்தியிலும் பிரதான வீதிக்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு மாற்று வழிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனினும் வெலிமடை மற்றும் கொழும்பு வீதியை இணைக்கும் மாற்று வழிகள் காணப்படவில்லை. அத்துடன் கொழும்பு வீதியில் இருந்து உயர்ந்த அளவிலான வாகன ஓட்டம் காணப்படுவதன் விளைவாக பண்டாரவளை நகரத்தின் உள்ளே போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது. அதற்கு இணங்க இப்போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக பரூந்து நிலையத்தில் இருந்து நுழைவாயில் வரையில் பேரூந்துகள் வெளியேறும் இடத்தில் இருந்து 135 மீற்றர் தூரத்திற்கு ஒரு ஒழுங்கையினை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.


		தற்போது உள்ள பாதசாரிகளின் பாதையினை ஒரு ஒழுங்கையாக பயன்படுத்துவதற்கும் மற்றும் நடைபாதையினை வீதி ஒதுக்கீட்டினுள் தற்காப்புச்சுவரில் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குஅப்பால் ஒரு பார்வைக்கான தளம் மற்றும் உணவக செயற்திட்டமும் சரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	போக்குவரத்து நெரிசலை குறைத்தல்
10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	வெலிமடை வீதியினை நோக்கி வீதி ஒழுங்கை
11.	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும்	வீதி அபிவிருத்தி அதிகாரசபை

21. பண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தையின் இடமாற்றம்

1	செயற்திட்ட முன்மொழி	பண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தையின் இடமாற்றம்
2	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>3 மைல் வீதி வட கபிலவெல(ழேசவா முயடிடைடயறநடய)</td></tr></table>
3	அணுகுமுறை	3 மைல் வீதி
4	அமைவிட படவரைவு	
5	தற்போதைய பாவனை	புாவனை அற்ற வெற்றுக்காரி
6	காணி உரிமையாளர்	பண்டாரவளை பிரதேச செயலாளர்
7	காணியின் விஸ்தீரணம்	4 ஏக்கர்
8	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	மொத்த வியாபார சந்தையினை பண்டாரவளை நகரத்தின் பொருளாதாரத்தினை கையாளும் பிரதான பொறிமுறைகளில் ஒன்றாகும் என அறிமுகப்படுத்தமுடியும். நாளாந்தம் இவ்வளாகத்திற்கு நாளாந்தம் 3000 விற்பனையாளர்கள் வரையிலும்


		மற்றும் விவசாயிகளும் வருகை தருவதுடன் மேலும் வருடத்திற்கு 9000 மில்லியன வரையிலான நிதி பரிவர்த்தனைகள் நடாத்தப்படுகின்றன. இவ் வளாகம் முற்று முழுதாக 3 மைல் வீதியை நோக்கி இருப்பதுடன் மேலும் மொத்த வியாபாரச்சந்தையின் செயற்பாட்டு நாட்களில் வீதியானது முற்று முழுதான போக்குவரத்தினை கொண்டிருக்கும். சந்தைக்கு வாகனத்தரிப்பிடங்கள் வழங்கப்படவில்லை. மேலும் அது உயர்ந்த சமூக சுழற்சியினைக்கொண்டுள்ள ஒரு தொகுதியாக இருப்பினும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தன்னும் கிடைக்கப்பெறவில்லை. மேலும் பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலைக்கு பிரதான அணுகுமுறையினை வழங்கும் அற்றம்பிற்றிய வீதி மற்றும் மாற்று வீதியான 3 மைல் வீதி மற்றும் ஆகியன இவ்வளாகத்தின் விளைவாக தடைப்படுகின்றது. இவ் உண்மைகளை கருத்தில் கொண்டு மொத்த வியாபாரச்சந்தை வளாகத்தினை வேறு ஓர அமைவிடத்திற்கு மாற்றப்படுவதனை பண்டாரவளை நகர அபிவிருத்தித்திட்டம் வாயிலாக அடையாளங்காணப்பட்டுள்ளது. அதற்கு இணங்க தற்போது பிரதேச செயலாளரின் கீழ் இருக்கும் கபிலவெல பத்தான(முயடிடையறநடய ீயவாயயெ) காணியில் அமைந்துள்ள மொத்த வியாபாரச்சந்தையினை இடமாற்றம் செய்வதற்கு அடையாளங்காணப்பட்டுள்ளது. இவ் வளாகத்திற்கான அணுகு வழியினை 3 மைல் வீதியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகளை தலத்தின் உள்ளேயேவழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் அபிவிருத்தியின் வாயிலாக மொத்த வியாபாரச்சந்தையின் விளைவாக ஏற்படும் போக்குவரத்து நெரிசல் 3 மைல் வீதியில் போக்குவரத்துக்கு ஒரு பிரச்சனையாக அமையாது. அத்துடன் இக்காணி 4 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டுள்ளதனால் பொருத்தமான இடவசதியினை வழங்கமுடியும் என்பதுடன் மேலும் எல்லா வாகனங்களையும் கையாழ்வதற்கு வேண்டிய வசதிகளையும் வழங்க முடியும். மேலும் காணிக்கான அணுகுமுறைமை அதன் இடவிளக்கவியலிற்க ஏற்றவாறு வழங்க முடியும். அத்துடன் அவசியமான சுகாதார வசதிகள் மற்றும் உணவு விற்பனை நியைங்கள் ஆகியன இத்தலத்திலேயே அமைக்கப்படும்.
9	செயற்திட்ட நோக்கங்கள்	• **மொத்த வியாபாரச்சந்தையினை ஒழுங்காக இடமாற்றம் செய்தல்.** • **மொத்த வியாபாரச்சந்தை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.** • **நகரத்தின் உள்ளே போக்குவரத்து நெரிசலைக்குறைத்தல்.**
1	செயற்திட்டத்தின் நன்மைகள்	**முறையான மொத்த வியாபாரச்சந்தை வளாகம் சுகாதார வசதிகள்**
1	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரிப்பும்	பண்டாரவளை மாநகர சபை நகர அபிவிரத்தி அதிகாரசபை

22. நீர் நிலைக்கு முன்பான நேர்வடிவ பூங்காவின் அபிவிருத்தி செயற்திட்டம் – தற்போதைய மொத்த வியாபாரச்சந்தையின் காணி

1.	செயல்திட்ட முன்மொழிவு	புண்டாரவளை வாவி அபிவிருத்தியும் மற்றும் நேர்வடிவிலான பூங்காவின் செயற்திட்டமும்
2.	அமைவிடம்	மாகாணம் | மாவட்டம் | பிரிவு | அமைவிடம் ஊவா | பதுளை | பண்டாரவளை | துற்போதைய மொத்த வியாபாரச்சந்தை காணி
3.	அணுகுமுறை	3 மைல் வீதி அற்றம்பிற்றிய வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	மொத்த வியாபாரச்சந்தை மற்றும் வெற்றுக்காணி
6.	காணி உரிமையாளர்	பண்டாரவளை மாநகர சபை
7.	காணி விஸ்தீரணம்	500 மீற்றர் தூரம்
8.	செயற்திட்டத்தினை நியாயப்படுத்தல்	புண்டாரவளை மொத்த வியாபாரச்சந்தை இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் அந்த வெற்றுக்காணியில் இச்செயற்திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க தற்போது உள்ள மொத்த வியாபாரச்சந்தைத்தொகுதியின் பின்னால் உள்ள வெற்றுக்காணியில் ஒரு சிறிய வாவியினை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக பண்டாரவளையில் வரலாற்று ரீதியிலான வாவிக்கு ஒரு மாற்றீடாக நீர் சார்ந்த அபிவிருத்தி நகரத்தில் மாற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இணங்க வெற்றுப்பள்ளத்தாக்கின் ஊடாக வழிந்து ஓடும் மழை நீரை நிறுத்தி மற்றும் ஒரு சிறிய வாவி புனரமைப்பு செய்யப்படுதல் வேண்டும். மேலும் 3 மைல் நீள வீதியானது மொத்த வியாபாரச்சந்தை இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்பு

		வெற்றிடமாவதனால் அது வாவியின் இடது கரை வழியே இருக்கை வசதிகள் கொண்ட ஒரு நேரிய பூங்காவாக நிலத்தோற்றமிடப்படுதல் வேண்டும்.
9.	செயற்திட்டத்தின் நோக்கங்கள்	• **நகரத்தில் மழை நீரினைச்சேகரிக்கும் ஒரு நீர்த்தேக்கத்தினை நிர்மாணித்தல்.** • **நீர் நிலைக்கு முன்பான பூங்காவின் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட பொழுது போக்கு வசதிகளின் மேம்பாடு** • **நகரத்தின் அழகுபடுத்தலை அதகரித்தல்.**
10.	செயற்திட்டத்தின் நன்மைகள்	நீர் தேக்கம்(சிறிய வாவி) நேர் வடிவங்கொண்ட பூங்கா
11.	செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும் மற்றும் பராமரித்தலும்	பண்டாரவளை மாநகர சபை நகர அபிவிருத்தி அதிகார சபை

23. பண்டாரவளை தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகே ஏரிக்கரை நேரியல் பூங்கா

1.	செயற்திட்ட முன்மொழி	பண்டாரவளை தொழில்நுட்ப கல்லூரி அருகே நீர் நிலை முன்பான நேர்வடிவ பூங்காவின் அபிவிருத்தி
2.	அமைவிடம்	<table><tr><td>மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>பிரிவு</td><td>அமைவிடம்</td></tr><tr><td>ஊவா</td><td>பதுளை</td><td>பண்டாரவளை</td><td>தொழில்துட்ப கல்லூரி அருகே உள்ள வாவி</td></tr></table>
3.	அணுகுமுறை	வேவத்தேனா வீதி
4.	அமைவிட படவரைவு	
5.	தற்போதைய பாவனை	வெற்றுக்காணி

6.	காணி உரிமையாளர்	பண்டாரவளை பிரதேச செயலாளர்
7.	காணியின் விஸ்தீரணம்	வாவி வழியே 1 கி.மீற்றர் தூரம்
